விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 07 புதன்கிழமை (19.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 62

## தொழில்நுட்ப அலுவலர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



### புங்குடுதீவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவிலுள்ள கிணற்றிலிருந்து 39 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் கைதடி 23

### எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில்

## மன்னாரில் இந்து மக்கள் சார்பில் சுயேட்சையாக போட்டியிட தீர்மானம்



### மன்னார் மாவட்ட இந்துக்குருமார் பேரவை

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் கோரிக்கை நியாயமானவையே



### பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் மல்க்கம் ப்ரூஸ்

(கொழும்பு)

தமிழ் மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை என தெரிவித்துள்ள பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் மல்க்கம் ப்ரூஸ் ஒரு நியாயமான தீர்வினை அடைய இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட பிரித்தானியா தயாராகவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### இரு கைக்குண்டுகள் பருத்தித்துறையில் மீட்கப்பட்டது

(கரணவாய்)

பருத்தித்துறையில் கைவிடப்பட்ட காணியொன்றில் இருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை கடற் 23

### நண்பன் உயிரிழப்பு விக்கிரகங்களை உடைத்த இளைஞன்

(யாழ்ப்பாணம்)

நண்பன் உயிரிழந்த விரக்தியில் கோவில் விக்கிரகங்களை அடித்து உடைத்த இளைஞர் ஒருவரை தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர். 23

## முதலீட்டுக்கு ஏற்ற நாடாக இலங்கையை மாற்றுவதே இலக்கு

### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

முதலீட்டுக்கு மிகப் பொருத்தமான நாடாக இலங்கையை மாற்றுவதே தனது இலக்காகுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். சுற்றாடலை பாதுகாத்து, நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான பொறிமுறையொன்றுக்கு சட்ட ரீதியான பின்புலத்தை உருவாக்க வேண்டுமெனவும் சுற்றாடல் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் 23

## கோட்டா அரசுக்கு சார்பாக அமெரிக்கா செயற்படுகிறதா?

### மனோ கணேசன் சந்தேகம்

(கொழும்பு)



கோட்டாபய ராஜபக்ச அரசிற்கு ஆதரவாக அமெரிக்கா செயற்படுகிறதா என சந்தேகம் தெரிவித்துள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன். 23

### பெரமுன – சுதந்திரக்கட்சி கூட்டணி

## வடக்கு, கிழக்கில் தேர்தலில் போட்டியிடாது

(கொழும்பு)

இலங்கை பொதுஜன பெரமுனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணி வடக்கு, கிழக்கில் பொதுத் தேர்தலில் போட்டியிடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. 23

## ஐ.தே.க தலைமையிலான கூட்டணி அன்னம் சின்னத்தில் போட்டியிட முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் 'அன்னம்' சின்னத்திலேயே போட்டியிடும் என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

புதிய கூட்டணி மற்றும் அதன் சின்னம் குறித்து இறுதி முடிவை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்றுச் செவ்வாய்க்கிழமை கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் கூடியது.

குறித்த செயற்குழுக் கூட்டத்தினை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். 23

### மற்றொரு பகிடிவதை

## கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டது

(கிளிநொச்சி)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில், மற்றொரு பகிடிவதை சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பல்கலைக்கழக நிர்வாகம் நேற்று 23

### மூதூரில் பொதுமகன் சுட்டுப்படுகொலை

## முன்னாள் இராணுவ சிப்பாய்க்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை

(திருகோணமலை)

மூதூரில் பொதுமகன் ஒருவரை சுட்டுப் படுகொலை செய்த முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு 10 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2006ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி மூதூர் பாரதிபுரத்தை 23



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்களைப் பிரிக்கிறது

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சாடல்

**(யாழ்ப்பாணம்) அரசுக்கும் பேரினவாதிகளுக்கும் நன்மை அளிப்பதற்காக தமிழ் மக்களைப் பிரிக்கும் செயல்களில் தொடர்ந்து ஒரு கட்சி ஈடுபட்டு வருகின்றதென்றால் தமிழ் மக்களை ஏமாற்றி வருவது நாங்களா? அவர்களா? அத்துடன் இத்தனை தரம் மக்களைப் பிரித்துப் பிரித்து செயற்பட்டமை தற்செயலாக நடந்த நிகழ்வுகளாக இருக்க முடியாது. யாரோ ஒருவரின் அல்லது பலரின் வழிநடத்தலில்தான் இவர்கள் இவ்வாறு நடக்கின்றார்கள் என்பது எனது சந்தேகம். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மீது முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கடுமையாகச் சாடியுள்ளார்.**

ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு வழங்கப்பட்ட பதில்களும் பின் வருமாறு.

கே:- "தமிழ்த் தேசிய மக்கள்முன் னணி"யினர் நீங்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் தமிழ் மக்களை ஏமாற்றி முடக்குவதற்கு ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சிக்குள் இணைந்துள்ளதாக கூறுகின்றனரே? உங்கள் கருத்தென்ன?

பதில்:- யார் இந்தத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்? அந்தப் பழைய தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில் பயணிப்பவர்களைத் தானேநீங்கள் கூறுகின்றீர்கள்?

ஊடகவியலாளர்:- ஆம்.

பதில்:- அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் கட்சியினர் தமது யாப்பை மாற்றி விட்டார்களா? எனக்குத் தெரிந்த வரையில் ஒற்றையாட்சிக்குள் ஐம்பதுக்கு ஐம்பது என்று தான் ஜீ.ஜீ. கூறிவந்தார். இப்போதைய முன்னணியினர் அதனை மாற்றிவிட்டார்களா? அப்படியானால் என்னவென்று? இப்பொழுது அவர்கள் சமஷ்டி என்று மாற்றியிருந்தால் ஜீ.ஜீ.தனது கட்சியில் இருந்த தந்தை செல்வாவிடம் மண்டியிட்டதாக அர்த்தமாகும். தனித்தமிழ் ஈழம் என்று மாற்றியிருந்தால்அவர் சி.சுந்தரலிங்கம், வி.நவரத்தினம் ஆகியோரின் கருத்துக்களை ஏற்றதாக முடியும். ஜீ.ஜீ.சிங்களவரிடம் மண்டியிட்டாலும் இன்னொரு தமிழரிடம் மண்டியிடமாட்டாரே! எனக்குத் தெரிந்த வரையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இன்றுவரையில் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஒரு கட்சிதான்!

அவ்வாறான கட்சியின் சின்னத்தையும் பதிவையும் தொடர்ந்து பாவிக்கும் முன்னணியினர் எவ்வாறு மற்றவர்களை தமிழ் மக்களை ஏமாற்றி ஒற்றையாட்சிக்குள் முடக்கஎத்தனிக்கின்றார்கள் என்று கூறலாம்.

நாங்கள் கேட்பது சமஷ்டி. அது எல்லோருக்கும் தெரிந்த விடயம். நாங்கள் ஒற்றையாட்சிக்குள் மக்களைக் கொண்டு செல்ல எத்தனிக்கின்றோம் என்றால் எமக்கும் மத்திய அரசாங்கங்களுக்கும் இடையில் ஏதோவொரு கரவான இணக்கப்பாடு இருப்பதாகக் கூறுகின்றார்களா?

ஊடகவியலாளர்:-ஆமாம். அவ்வாறுதான் கூறுகின்றார்கள்!

பதில்:- சரி! எங்களுக்குஅவ்வாறானஉறவு இருப்பதானால் நாங்கள் தமிழ் மக்களிடையே ஒற்றுமையை உண்டு பண்ண எத்தனித்திருக்கமாட்டோம் அல்லவா?

ஊடகவியலாளர்:-விளங்கவில்லை.

பதில்:- அதாவது நாங்கள் மத்திய அரசாங்கங்களுடன் கரவான உறவு வைத்திருப்பது உண்மையானால் நாங்கள் என்னசெய்வோம்? எந்தத் தருணத்திலும் தமிழ் மக்களோ மக்கட் தலைவர்களோ ஒன்றுசேரவிடாது தடுப்போம் அல்லவா? அதாவது தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவதால் மத்திய அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தடுப்போம் அல்லவா?

ஊடகவியலாளர்:-ஆமாம்.

பதில்:- நாம் அப்படியொன்றும் செய்யவில்லையே! இன்றும் நாங்கள் தமிழர் ஒற்றுமைக்காக கஜேந்திரகுமாரை எங்களுடன் சேருமாறுதானே கூறி வருகின்றோம். அவரின் மூன்று தலைமுறையினரைத் தெரிந்த என்னால் என் மகனுடன் இறுதிச் சட்டப் பரீட்சை செய்த மற்றும் என் நண்பர் தர்மராஜா தன் மகன்போல் அரவணைத்த கஜேந்திரகுமாரை விமர்சிப்பது எனக்கு சங்கடமாக இருக்கின்றது. ஆனால் உண்மைகளை வெளியிட வேண்டிய தருணம் வந்துவிட்டது.

- ❋ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை முதலில் 2009ல் குலைத்தவர் யார்?
- ❋ தமிழ் மக்கள் பேரவையின் ஒற்றுமையைக் குலைத்து அதன் முக்கியத்துவத்தை மழுங்கச் செய்தவர் யார்?
- ❋ பல்கலைக்கழகத்தில் ஆறு கட்சிகள் சேர்ந்து தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஆவணப்படுத்த எத்தனித்த போது அதன் ஒற்றுமையைக் குலைத்தது யார்?
- ❋ காணாமல்போனோரின் உறவினர்கள் ஒன்றுசேர்ந்து தமக்குள் ஒரு ஐக்கியத்தைத் தேடியபோது தம் கட்சிக் கென வேறு ஒரு அலகை உண்டு பண்ணி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை இரண்டு அணி களாகப் பிரித்து அவர்கள் போராட்டத்தை திட்டமிட்டு மழுங்கடிப்பவர் யார்?
- ❋ யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்காக தமிழர் அனைவரும் உணர்வெழுச்சியுடன் பங்குகொள்ளும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளில் தாம் மட்டும் வேறான இடத்தில் தமது நிகழ்வை நிகழ்த்தி பிரிவினையை வளர்ப்போர் யார்?
- ❋ ஈ.பி.ஆர்.எல்.எப். உடன் கூட்டுச் சேருவதாகக் கூறி காலத்தைக்கடத்தி அவர்கள் கூட்டைச் சிதைத்தவர்கள் யார்?
- ❋ எமது இரண்டாவது "எழுக தமிழ்" நிகழ்வை எப்படியாவது குலைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு ஒற்றுமையைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் இறங்கியவர்கள் யார்?
- ❋ தமது கொள்கை ஒற்றையாட்சியா, சமஷ்டியா, தனிநாடா என்பதை வெளிப்படுத்தாமல் ஒற்றையாட்சி காங்கிரஸ் சின்னத்தையும் கட்சியையும் தொடர்ந்து பாவித்து வருபவர்கள் யார்?
- ❋ இந்தியா வழி நடத்துகின்றது என்று மற்றக கட்சிகளை கண்டித்துக் கொணடு இரவில் ஜெட் விங்ஸில் சீனப் பிரதிநிதிகளைக கரவாகக் கண்டுவந்த வர்கள் யார்?
- ❋ கோட்டாபய பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது தமது சகோதரனை விடுவிக்க கோட்டாபயவுடன் கரவான ஒப்பந்தங்களில் ஈடுபட்டவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?
- ❋ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் விரக்தி கொண்ட மக்களை அவர்கள் நேசித்த தமிழ் மக்கள் பேரவை மூலம் தமக்கு ஆதரவைப் பெற தமிழ்த் தேசியக் பேரவை என்ற ஒன்றை உருவாக்கி தமிழ் மக்கள் பேரவைக்கு ஆதரவான மக்களின் வாக்குகளை 2018ல் ஏமாற்றிப் பெற்றவர்கள் யார்?
- ❋ பேசுவது முன்னணி, தஞ்சமடைவது காங்கிரஸ் என்ற ரீதியில் தம்மை ஒற்றையாட்சிக் காங்கிரஸினுள் இணைத்து வைத்து அரசாங்கத்திற்கு ஒற்றையாட்சி என்ற தலையையும் தமிழ் மக்களுக்கு இன்னொரு முகமாக வாலையும் விலாங்கு மீன்போலக் காட்டும் கட்சி எந்தக் கட்சி?
- ❋ ஈ.பி.ஆர்எல் எப்.ஐ. வெளியேற்று இல்லையேல்நாங்கள் உங்கள் கூட்டிலஇணைய மாட்டோம் என்று எங்களுடன் இன்று வரையில் அடம்பிடிப்பவர்கள் யார்?
- ❋ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெற்கில் சோரம் போன நிலையில் அரசியலை கொண்டு செல்ல வலுவான தொரு அரசியல் கூட்டு உருவாகும் போது தேசிய நலன் கருதி தாமும் கை கொடுத்து இணையாமல் மக்களுக்கு துரோகம் செய்பவர்கள் யார்?

ஆகவே தமிழ் மக்களின் ஒற்றுமையை இதுவரையில் திட்டம் போட்டுக் குலைத்து வருபவர்கள் யார் என்று நான் உங்களுக்குக் கூறத் தேவையில்லை. நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன். தமிழ் மக்களின் பிளவு அல்லது ஒற்றுமையின்மை யாருக்கு நன்மை அளிக்கும் என்றார். (ம-3)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் K.K.S வீதி, இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு கிழமை/மாத அடிப்படையில் திருமணம், விருந்தினர் வருகை போன்ற நிகழ்வுகளுக்கு AC உடன்வாடகைக்கு.

077 285 0753 (2316)

## WEL CARE CLINIC
வெல்கெயர் வைத்திய நிலையம்

நுணாவில் சந்தி, Church அருகே
Dr. தயாளன் கிளினிக் இருந்த இடத்தில்

சேவைகள்

- OPD காலை 8.30 - 11 மணிவரை
  மாலை 4.30 - 6 மணி வரை
- இரத்தம், சிறுநீர் பரிசோதனைகள்
- வைத்திய நிபுணர்கள் சேவையும் உண்டு
  Specialist Consultation

- 20.02.2020 அன்று காலை சுபவேளையில் ஆரம்பமாகின்றது.
- 20.02.2020 முதல் வரும் 25 பேருக்கு இலவசமாக BloodSugar இரத்தப் பரிசோதனை நடைபெறும்
- 19ஆம் திகதி இரவு 8.00 மணிக்கு சாப்பிட்டபின் மறுநாள் காலை 8.00 மணிக்கு இரத்தம் எடுக்க வரும்போது தேநீர், சாப்பாடு எதுவும் எடுக்காமல் வரவும் (2315)

தொ.இல- 077 873 0129

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 20.01.2020 (திங்கட்கிழமை) அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர் கோவிந்தசாமி பஞ்சாட்சரம்
(பெயின்ரர் மணியம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (19.02.2020) புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து மு.ப 11.30 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீரங்கம்
நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு.

(C-9.20)

தகவல்
குடும்பத்தினர்

## “குற்றவாளிகளைத் தப்பிக்க விடாதே”

# கற்றலுக்கான சுமுகமான சூழலை உருவாக்கக் கோரி

# யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் போராட்டம்

### நீதியான விசாரணையை தீவிரப்படுத்த வலியுறுத்து







(யாழ்ப்பாணம்)

**கற்றலுக்கான சுமுகமான சூழலை உருவாக்குமாறும் விரிவுரையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு கோரியும் நேற்று யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

கடந்த 14 ஆம் திகதி குறித்த கல்லூரியில் கற்கும் மாணவர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலால் வெளி இடங்களில் இருந்து வாள்களுடன் அழைத்து வரப்பட்ட நபர்கள் விரிவுரையாளர்களைத் தாக்கியும் அச்சுறுத்தியும் சென்றனர்.

இத் தாக்குதலைக் கண்டித்து கல்லூரிச் சமூகத்தால் மேற்படி கல்லூரி முன்றலில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கல்லூரியின் பணிப்பாளர், பதிவாளர், மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

“குற்றவாளிகளைத் தப்பிக்க விடாதே”, “யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்களினதும், அரச ஊழியர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்து” ஆகிய இரு பிரதான கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுமுகமான கற்றல் சூழலை உருவாக்கு உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை தமது கைகளில் தாங்கி கடும் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் வடமாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் யாழ்.மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன. (இ-10-18)

---

### ஐ.தே.க.கூட்டணி சின்னம்

# அன்னம் அல்லது யானை அகிலவிராஜ் நம்பிக்கை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான புதிய கூட்டணி சின்னம் பெரும்பாலும் அன்னம் அல்லது யானையாகவே அமையுமென அக்கட்சியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

சஜித் தலைமையிலான புதிய கூட்டணிக்கான சின்னம் குறித்து கொழும்பு ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “ஐக்கிய தேசிய கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டம் இன்று இடம்பெறும்.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் உருவாக்கப்படவுள்ள கூட்டணியின் சின்னம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்படும்.

அதாவது கட்சியின் சின்னம் குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனாலும் தற்போது ஒருமித்த தீர்மானமொன்றை எடுப்பதற்கு அனைவரும் இணங்கியுள்ளனர்.

அந்த வகையில் புதிய கூட்டணிக்கான சின்னம் பெரும்பாலும் அன்னம் அல்லது யானையாகவே இருக்கும்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# நாட்டில் நாற்பதாயிரம் போலி வைத்தியர்கள்!

### அரச வைத்திய அதிகாரிகள் அரசிடம் அவசர கோரிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள போலி வைத்தியர்களை இனங்கண்டு தண்டிக்க நடைமுறையில் சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வருமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை விடுத்தது.

நாடு முழுவதும் சுமார் நாற்பதாயிரத்திற்கும் அதிகமான போலி வைத்தியர்கள் மக்களுக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும் அந்தச் சங்கம் தெரிவித்தது.

இவ்வாறான போலி வைத்தியர்களில் சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமானோரை அடையாளம் கண்டுள்ளதாக அந்த சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான போலி வைத்தியர்களை இனங்கண்டு, அவர்களைத் தண்டிக்க நடைமுறைச் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வருமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

---




எமது பாடசாலையில் கடந்த பத்தாண்டு காலமாக ஆசிரியர் பணியை திறம்பட ஆற்றி ஓய்வு பெறும் ஆசிரியை

திருமதி.ரேணுகாதேவி சிவசோதி

(Spl Tr.Commerce)

(பகுதித்தலைவர், SLTS-I)

அவர்களின் மணிவிழா நாளில் அவர்களுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும், நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை பிராா்த்தித்து வாழத்துகின்றோம்.

# மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

சேவை விபரம்

17.08.1988-31.10.1998 - யா/புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட வித்தியாலயம்.

01.11.1998-13.07.2010 - யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

14.07.2010-18.02.2020 - யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

“வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்” (2298)

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

# ஐபிஎல் 2020 சீசனுக்கான போட்டி அட்டவனை:அதிகார பூர்வமாக வெளியீடு




ஐபிஎல் 2020 சீசன் ரி20 கிரிக்கெட் திருவிழா மார்ச் 29-ந்தேதி தொடங்குவதாக பிசிசிஐ தலைவர் கங்குலி ஏற்கனவேதெரிவித்திருந்தார். இந்நிலையில் கடந்த சனிக்கிழமை முதல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - சென்னை சூப்பர் கிங்ஸ் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த போட்டி வான்கடே மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்த ஐபிஎல் தொடரில் வார இறுதி நாளில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் 2 போட்டிகள் நடைபெறும். லீக் போட்டிகள் 44 நாட்களுக்கு பதிலாக 50 நாட்கள் நீட்டிக்கப்பட்டு உள்ளன. போட்டிகள் இரவு 8 மணிக்கு தொடங்கும் அதே நேரத்தில் சில போட்டிகள் மாலை 4 மணிக்கு தொடங்கும் எனத் தகவல் வெளியானது. அத்துடன் போட்டி அட்டவணையும் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் நேற்று அதிகாரப்பூர்வ போட்டி அட்டவணையை பிசிசிஐ வெளியிட்டுள்ளது. சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில் மொத்தம் 7 லீக் ஆட்டங்கள் அரங்கேறுகின்றன. இங்கு முதல் ஆட்டமாக ஏப்ரல் 2-ந்தேதி சென்னை சூப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதுகின்றன.





யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பெருமையுடன் வழங்கும்

** மனவளக்கலையின் மருத்துவ விளக்கம் **

வேதாத்திரியத்தின் சூட்சுமத்தை விளக்க வருகிறார்

தமிழகத்தின் தலைசிறந்த பேராசிரியர்களில் தலைமையானவராக திகழும்

இதய நல மருத்துவர்

பேராசிரியர் V.சொக்கலிங்கம்

அவர்கள்

- புதிரான நோய்களுக்கு புதிதான விளக்கங்கள்
- உடற்பயிற்சியினால் உள்ளே நடைபெறும் மாற்றங்கள்
- தியானத்தில் மேன்மை பெற்றிட
- அன்பர்களின் அனைத்து ஐயப்பாடுகளும் நீங்க

அனைவரும் அலையெனத்திரண்டுவாரீர்

இடம் - யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்,

காலம் - 22.02.2020

நேரம் - மாலை 4.30

(C-9279)

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்,
இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல:0212222772



# நேர்மறை,பேரார்வம் உலகக் கோப்பையை வெல்ல உதவும்: ஷாதுல் தாகூர்

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் வேகப்பந்து வீச்சாளர் ஷர்துல் தாகூர் இடம் பிடித்திருந்தார். இவர் அதிக அளவில் ரன்கள் விட்டு க்கொடுத்தார். இதனால் ஒருநாள் போட்டியில் இவருக்கு இடம் கொடுத்தது யார்?, ஒரு நாள் கிரிக்கெட் போட்டிக்கு இவர் தேவை தானா? என்று கிரிக்கெட் ரசிகர்கள் கொதித்தனர்.

இந்நிலையில் நேர்மறை மற்றும் பேரார்வம் ஆகியவற்றின் மூலம் இந்திய அணிக்கு ரி20 உலக கோப்பையை வாங்கிக் கொடுக்க முடியும் என ஷர்துல் தாகூர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஷர்துல் தாகூர் கூறுகையில் "உறுதியாக நான் உலக கோப்பை மீது கண் வைத்துள்ளேன். நேர்மறை சிந்தனையுடன் போட்டியில் விளையாடுவதால், அதிக தன்னம்பிக்கை பெற்றுள்ளேன். போட்டி மீதான பேரார்வம் உலக கோப்பையை அணி வெல்வதற்கு, அல்லது என்னுடைய வேலை சிறப்பாக அமைய உதவும்.

## கரீபியன் பிரீமியர் அணியை வாங்குகிறது பஞ்சாப்




இந்திய கிரிக்கெட் வாரியம் இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) ரி20 கிரிக்கெட் லீக்கை நடத்துவதுபோல் வெஸ்ட் இண் டீஸ் கிரிக்கெட் போர்டு கரீபியன் பிரீமியர் லீக் ரி20 கிரிக்கெட் தொடரை நடத்தி வருகிறது. இதில் ஆறு அணிகள் விளையாடுகின்றன. இதில் ஒரு அணி செயின்ட் லூசியா ஜோக்ஸ் அணியாகும். இந்த அணிக்கு டேரன் சமி கேப்டனாக இருந்து வருகிறார்.

இந்நிலையில் ஐபிஎல் கிரிக்கெட்டில் விளையாடும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அந்த அணியை வாங்க இருக்கிறது. இதற்கான முதற்கட்ட வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டதாம். இந்திய கிரிக்கெட் வாரியம் அனுமதி வழங்கியதும் ஒப்பந்தம் நிறைவு பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளர்கள் ஒருவரான ஷாருக்கான் டிரினிடாட் அண்டு டொபாக்கோ அணியை வாங்கினார். அதன்பின் அந்த அணியின் பெயர் டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் என பெயர் மாற்றப்பட்டது.

## ஆறு அணிகள் பங்கேற்கும் பாக்கிஸ்தான் சூப்பர் லீக் போட்டியில் 36 வெளிநாட்டு வீரர்கள்




பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி 20 கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டால் நடத்தப்பட்டு வருகிறது. நான்கு வருடத்திற்கு முன் இந்தத் தொடர் அறிமுகமான போது வெளிநாட்டு வீரர்கள் பாதுகாப்பை காரணம் காட்டி பாகிஸ்தான் மண்ணில் விளையாட தயங்கினர்.

இதனால் ஐக்கிய அரபு எமிரேட்சில் போட்டிகளை நடத்த வேண்டிய சூழ்நிலை பாகிஸ்தானுக்கு ஏற்பட்டது. அதன்பின் மெல்ல மெல்ல பாகிஸ்தான் மண்ணில் கிரிக்கெட் போட்டியை நடத்த ஆரம்பித்தது. இதன் காரணமாக 2020 சீசனில் எல்லா ஆட்டத்தையும் பாகிஸ்தான் மண்ணில் நடத்துகிறது.

இந்தத் தொடர் நேற்று கராச்சியில் தொடங்கியது. இதில் வாட்சன், டேரன் சமி உள்பட 36 வெளிநாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார். மீண்டும் பாகிஸ்தான் மண்ணில் சர்வதேச கிரிக்கெட் தொடர் நடைபெற இது மிகப்பெரிய அளவில் உதவியாக இருக்கும் என பாகிஸ்தான் நம்புகிறது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டின் தலைமை நிர்வாகி வாசிம் கான் கூறுகையில் "வெளிநாட்டு வீரர்கள் பாகிஸ்தான் வருவது எங்களுக்கு மிகப்பெரிய போனஸ். சர்வதேச போட்டிக்கான மிகப்பெரிய முன்னேற்றம். ஏனென்றால், வெளிநாட்டு வீரர்கள் பாகிஸ்தான் மண்ணில் நான்கு வாரங்கள் முதல் ஐந்து வாரங்கள் வரை தங்கியிருந்து பாதுகாப்பான முறையில் விளையாடலாம் என நம்புகிறார்கள்" என்றார்.

2009-ம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாடும்போது இலங்கை அணி சென்ற பஸ் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதன்பின் பாகிஸ்தான் செல்ல வெளிநாட்டு அணிகள் மறுத்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா வைரஸ் அச்சுறுதலால் மல்யுத்த போட்டியில் பங்கேற்க சீன அணிக்கு அனுமதி மறுப்பு



ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி டெல்லியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் 23-ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டியில் கலந்து கொள்ள கடும் முயற்சிக்கு பிறகு பாகிஸ்தான் அணிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக 40 பேர் கொண்ட சீன அணிக்கு இந்த போட்டியில் பங்கேற்க மத்திய அரசு அனுமதி அளிக்க மறுத்து விட்டது.

சீன அணியினருக்கு விசா வழங்க முடியாது என்று மத்திய அரசு கைவிரித்து விட்டது. இது குறித்து இந்திய மல்யுத்த சம்மேளன உதவி செயலாளர் வினோத் தோமர் கருத்து தெரிவிக்கையில், 'கொரோனா வைரஸ் தாக்குதல் உலகம் முழுவதும் பரவி வருகிறது. எனவே தற்போது வீரர்களின் உடல் நலம் மிகவும் முக்கிய பிரச்சினையாகும். சீன அணியினருக்கு மத்திய அரசு விசா வழங்க மறுத்ததற்கான காரணத்தை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது' என்றார்.

# ஜெனிவா தீர்மானத்திலிருந்து உடன் விலக அரசு தீர்மானம்

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானத்திலிருந்து உடனடியாக விலகுவதற்குத் தீர்மானித்துள்ளதாக ஆங்கில இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டது.**

நேற்றுக் காலை இது குறித்த விசேட கூட்டமொன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உட்பட முக்கிய அமைச்சர்களும் வெளி விவகார அமைச்சக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் உடனடியாக விலகும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடைமுறை அரசியல் யதார்த்தங்களின் அடிப்படையில் அரசாங்கத்தின் கொள்கைகளுடன் உடன்படவில்லை என்பதாலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இரு தீர்மானங்களில் இருந்தும் விலகுவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அரசாங்கத்தின் இந்த முடிவை அடுத்தவாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் உத்தியோக பூர்வமாக வெளியிடும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

அதற்கு முன்னதாக ஜெனிவா தீர்மானத்திலிருந்து விலகும் முடிவை அரசாங்கம் அமைச்சரவையிடம் சமர்ப்பித்து அதற்கான அனுமதியைப் பெறும் எனவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# திருட்டுகளுடன் தொடர்புடைய 5 இளைஞர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் கைது செய்யப்பட்ட பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அரியாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் திருடர்கள் மறைந்திருப்பதாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த வீடு சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது குறித்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணமும் 20 பவுண் நகைகளும் மீட்கப்பட்டதோடு குறித்த வீட்டில் தங்கியிருந்த ஐந்து இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது அவர்களை எதிர் வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (இ-10)


## மரண அறிவித்தல்

### திருமதி.மேரி குணராதா (ரதி) தவரட்ணம்

**(ஓய்வுபெற்ற அதிபர், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)**



பிறப்பு 1937.31.05

மகிமைக்குள் பிரவேசித்தது 2020.02.17

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி.மேரி குணராதா (ரதி) தவரட்ணம் (ஓய்வுபெற்ற அதிபர் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) அவர்கள் 17.02.2020 திங்கட்கிழமை அன்று கர்த்தருக் குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான திரு.S.V.குணநாயகம் திருமதி ஞானமணி அவர்களின் அன்பு மகளும், காலங்சென்ற திரு. J.G. தவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், Rev.சிஸ்டர் யூனிஸ் (இலங்கை பெந்தெக் கொஸ்தே சபை) சோபனா, லெஸ்லி (லண்டன்), காலஞ்சென்ற வெஸ்லி அவர்களின் அன்புத் தாயாரும், சிவலோகநாயகி (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும், கேஷன், கேசியா (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் மற்றும் காலஞ் சென்றவர்களான குண மணி இராஜரெட்ணம், குணசிலன் மற்றும் Dr.குணபாலன் (கனடா), Dr.குணசெல்வம், Dr.குளோரியானா, குண ரூபினி, செல்வநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று புதன்கிழமை 19.09.2020 மதியம் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக் கத்திற்காக சுப்பர்மடத்திலுள்ள சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள் அனை வரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

1ம் ஒழுங்கை ஐயனார் கலட்டி, பருத்தித்துறை.

தகவல்: பிள்ளைகள்


# குடும்பஸ்தர் மீது கும்பல் தாக்குதல் தலையில் காயம்; தையலகம் சேதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு முன்பாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படு காயமடைந்தார்.

இதேவேளை அவ்விடத்திலுள்ள தையலகம் ஒன்றும் குறித்த கும்பலால் அடித்துச் சேதமாக்கப் பட்டது.

இச்சம்பவத்தில் சிவன் கோவிலடி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 36 வயது அ.சிவதாஸ் என்ற குடும்பஸ்தர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இத்தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (இ-30)

# போட்டிகள், விருதுகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவலகள் திணைக் களத்தால் இவ்வருடமும் போட்டி கள், விருதுகளுக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. தேசிய கலை இலக்கியப் போட்டி - இப் போட்டியானது பாலர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட மற்றும் திறந்த பிரிவின் கீழ் நடத்தப்பட வுள்ளது.

2. அரச சிறுவர் ஓவியப் போட்டி - 05 வயது முதல் 18 வயது வரை

3. எழுத்தாளர் நூல் கொள்வனவு, அரச இலக்கிய விருதுக் கான நூல் கொள்வனவு (2019. 01.01 முதல் 2019.12.31 வரையான காலப்பகுதியில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல்கள்)

4. தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி.

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்கள் மற்றும் விண் ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக் கப்பட்டதுடன் ஆர்வமுள்ள எழுத் தாளர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவில் விண்ணப்பப் படிவங் களைப் பெற்று விண்ணப்பிக்க முடியுமென பிரதேச செயலாளர் திருமதி.சுபாஜினி மதியழகன் அறிவித்துள்ளார். (இ)

# கிணற்றடியில் வழுக்கி விழுந்த முதியவர் மரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மீசாலை கிழக்குப் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்ற முதியவர் ஒருவர் வழுக்கி விழுந்து உயிரிழந்தார். மீசாலை கிழக்கு மீசாலையைச் சேர்ந்த 83 வயது சின்னப்பு செல்வரத்தினம் என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த முதியவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-30-114)

# திறன் வகுப்பறைத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் திறன் வகுப்பத் திறப்பு விழா இன்று 19 ஆம் திகதி புதன்கிழமை முற் பகல் 10 மணியளவில் அதிபர் வி.இந்திர லிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக, கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ஆர்.சிவஞானம், கௌரவ விருந்தினராக கொ்மர்ஷல் வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் திருமதி.தபோதினி கஜரூபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-60)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர். சாத்தையா சின்னையா

மலர்வு 22.05.1929

உதிர்வு 21.01.2020



எமது பாசத்திற்குரிய தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு உடன் ஓடி வந்து பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து துயரத்தில் பங்கேற்ற அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மறறும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை 20.2. 2020 நாளை காலை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வுகளிலும் தாங்களும் கலந்து கொள்ள வேண்டும் என அன்புடன் அழைக்கின்றோம்.

இல.2048/12, தர்மபுரம். 077 258 7581

தகவல்:-மகன் சி.கந்தசாமி (பாப்பா,வசந்தன்) மற்றும் குடும்பத்தினர்.

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## இராசிக் குறியீடுகளை பயன்படுத்தும் விதம்

கும்ப இராசியின் உருவம் பானையை தலையில் சுமந்தபடி நிற்கும் மனிதனாகும். பானையானது சேகரிப்பு மற்றும் சேமிப்பின் அடையாளமாகும். இதனால் கும்ப இராசிக்காரர்கள் யாரிடம் பழகினாலும் அவர்களிடமிருந்து தனக்கு என்ன கிடைக்கும் என்பதிலேயே குறியாக இருப்பார்கள் எனக் கூறப்படுகிறது.

அதாவது இவர்கள் எதை செய்தாலும் இலாபம் கருதியே செயற்படுவார்கள். பிறரிடம் உதவி கேட்பதற்கு இவர்கள் தயங்கவே மாட்டார்கள்.

யாரிடம் பழகினாலும் அவர்களிடம் ஏதாவது ஒரு உதவியை எதிர்பார்ப்பார்கள். மனிதன் பானையை தலையில் சுமந்தபடி நிற்பதால் இந்த இராசிக்காரர்கள் பிறர் சுமைகளையும் தானே சுமப்பதற்கு தயாராக இருப்பார்கள். அதாவது அடிமை வேலை செய்வதற்கு தயங்க மாட்டார்கள்.



கும்பம்

# அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பம்



(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நான்கு இடங்களில் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பல்வேறுபட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

அந்தவகையில் கல்வயல் டேனியா முன்பள்ளியில் 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நீர்த்தாங்கி.கல்வயல் ஜே/305 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மதகு அமைத்தல், கைதடி மத்தி உதய சூரியன் சனசமூக நிலையத்தில் நீர்த்தாங்கி அமைத்தல் மற்றும் நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீதிப் புனரமைப்பு ஆகிய நான்கு வேலைத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

கிராம உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட ஒதுக்கீட்டில் இடம்பெறுகின்ற குறித்த வேலைத்திட்டங்களுக்கான அடிக்கல்லை பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய அங்கஜன் இராமநாதன் நாட்டி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் தேவந்தினி பாபு, திட்டமிடல் பணிப்பாளர் சுபச்செல்வன்,சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களான வேலாயுதபிள்ளை மற்றும் நந்தகோபால், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தங்கவேலு மற்றும் அப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(ஜ-30)

# சிவராத்திரியை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பிரதான மண்டபத்தில் மகா சிவராத்திரியன்று (நாளை மறுதினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை) இரவு 8 மணியளவில் சமஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவநெறிச்செம்மல் இளம்சைவப் புலவர் ச.நவநீதன் "சிவசிவ என்னச்சிவகதி தானே" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

யாழ்ப்பாணம் நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் பிரதான மண்டபத்தில் மகா சிவராத்திரியன்று இரவு 10 மணியளவில் சிவநெறிச் செம்மல் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் "லிங்கோற்பவ மகிமை" எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

சிவராத்திரியை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

# செயற்பட்டு மகிழ்வோம் நாளை

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை 20 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) த.பாலராஜ், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை மின்சார சபை வடபிராந்திய அலுவலக உதவிக் கணக்காளர் க.சுரேஸ் நேசன், யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் திருமதி வி.கடம்பமலர், யா/கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை ஓய்வுநிலை அதிபர் இ.செந்தில்குமரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# யாழ்.பல்கலை. பேரவைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பேரவை உறுப்பினர்களின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை யாழ்.பல்கலைக் கழக தகுதி வாய்ந்த அதிகாரி எஸ்.கந்தசாமி தலைமையில் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. (இ-10)

# தச்சன்தோப்பு வைரவர்கோயில் வருடாந்த வேள்வித் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தச்சன்தோப்பு ஸ்ரீ குத்து வைரவர் கோயிலின் வருடாந்த வேள்வித் திருவிழா இன்று 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணியளவில் இடம் பெறும்.

இவ் வேள்வித் திருவிழாவானது, கடந்த வெள்ளிக்கிழமை கொடிக்கட்டுடன் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.(இ-7)

# இராசி பலன்

**மீனம்**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மேடம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுக போட்டிகளைச் சமாளிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்**
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்**
உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்**
பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் பண வரவால் சந்தோசமடைவீர்கள்.

**கடகம்**
மறைமுக எதிர்ப்புகள் மாறும், வழிபாடு சிறப்பினைத் தரும், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்**
உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும், பிறர் உதவியுண்டு.

**தனுசு**
மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**விருச்சிகம்**
தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது, நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்**
சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி**
பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | ராகு |
| சூரி, புத | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகினி | | |
| | | | |
| சனி,குரு, செவ், கேது,சந் | | | |

**19.02.2020**
மாசி 7, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு
ஏகாதசி மாலை 6.07 மணிவரை
மூலம் முற்பகல் 9.17 மணிவரை
சுபநேரம் 5.02 - 6.32 மணிவரை
இராகுகாலம் 12.32 - 2.02 மணிவரை
ஏகாதசி விரதம்,
திறமையும், நம்பிக்கையும் வெல்ல முடியாத படை
வளவன்

# தியாகி அறக்கொடை நிறுவனத்தின் மாபெரும் மக்கள் பணி திட்டங்கள் கையளிக்கும் நிகழ்வு 19.02.2020 இன்று புதன்கிழமை நடைபெறுகின்றது

## BASE HOSPITAL TELLIPPALAI GRAND OPENING CEREMONEY

## THIAGENDRAN CLINIC CENTRE

### 19.02.2020

**Thiagendran- Clinic Centre**

**GRAND OPENING CEREMONEY**

**Date:** 19.02.2020 Wednesday
**Time:** 4.30 p.m
**Venue:** V.Thiagendran Clinic Center Base Hospital-Tellippalai.

*We Cordially inviting you to attend and grace this historic event*

Medical Superintendent, Staff and Patient Welfare Society
Base Hospital- Tellippalai

**Chief Guest**
Mr. V. Thiagendran Esqr (Sponser of the Building)
Founder of Thiyahie Charitable Trust- (TCT)
With the participation of
Mr. K. Theivendram Esqr
Secretary-Ministry of Health, Northern Province.

Dr.A.Ketheswaran Esqr
Provincial Director Of Health Services, Northern Province.

Dr. E.Devanesan Esqr
Regional Director of Health Services, Jaffna.

**Chair Person**
Dr.R.D.G.Wimalasena Esqr
Medical Superintendent
Base Hospital- Tellippalai.


**Agenda**

- Receiving the Guests
- Lighting Traditional Oil Lamp
- Ceremonial Opening
  - Unveiling Commemorative Plaque
  - Ribbon Cutting
- Religious Leaders Blessings
- Welcoming by
  Dr. R.D.G .Wimalasena
  Chair Person , MS,BH,Tellippalai
- Introduction Of The event by
  Mr. S. Rasendiran
  Chief Matron, BH, Tellippalai
- Honoring Speeches by:
  Dr.K.Sivaraman Senior Consultant Physician
  Mr.K. Theivendram Esqr, Secretary,Ministry of health.N.P
  Dr.A. Ketheeswaran Esqr, PDHS. N.P
  Dr. E. Devanesan Esqr, RDHS.Jaffna
  Representative of TCT
  Mr. S. Hariharan Esqr, Secretary, Patient Welfare Society.
  BH, Thellippalai
- Honoring The chief Guest
- Speech Of The Chief Guest
  Mr. V. Thiagendran Esqr.
- Vote Of Thanks - Dr. T. Pragashan
  Medical Officer, Quality Management Unit, BH,
  Tellippalai

(c-9278)

**Thank You**

**தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 90 லட்ச ரூபாவில் அமைத்துக் கொடுக்கப்பட்ட Clinic Centre 4.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.**






**கோப்பாயில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம்**

முதற் கட்டமாக ஐந்து பயனாளிகளுக்கு தலா 1 பரப்பு காணியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீட்டுத்திட்டம் கையளிக்கப்பட விருக்கின்றது. இதன் மொத்த பெறுமதி ஒரு கோடியே 25 இலட்சம் (10.30 am)



**ஆனைப்பந்தி எம்.எம்.வித்தியாலயத்திற்கு நுழைவாயில் மற்றும் முன்பக்க மதில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு (9.00 am)**




அத்துடன் இந்நிகழ்வில் விசேட தேவையுள்ளவர்களுக்கு Wheelchairs வழங்கப்படவுள்ளது.

மகளிர் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பயனாளி 30 பேருக்கு மொத்தமாக 10 லட்சம் ரூபா வங்கிப் புத்தகமாக வழங்கப்பட இருக்கின்றது.

**தியாகி அறக்கொடை நிறுவனம்**
**527, நாவலர் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.**

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நீரிழிவு நோயில் பயன்படும் மூலிகைகளும் பாரம்பரிய உணவுகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்தமருத்துவத்தில் நீரிழிவு எனப்படும் மது மேக நோயை கட்டுப்படுத்துவதற்கு மூலிகைகளும், பாரம்பரிய உணவுகளும் பயன்படுத்தப்படுகின்றது. இதில் நீரிழிவை கட்டுப்படுத்தக்கூடிய மூலிகைகளாக சிறுகுறிஞ்சா, பாகற்காய், குருவித்தலைப் பாகல், துப்பங்காய், அம்பிரலங்காய், மலைவசம்பு, பலா, கடல் ராஞ்சி, ஆல், அழிஞ்சில், பப்பாசி பிஞ்சு, நிலப்பனங் கிழங்கு, சிறுபூனைக்காலி இலை, கறிவேப்பிலை, ஆவரசு, பொன்னாவரசு, கொவ்வை, நாவல், தொட்டாச்சுருங்கி, தீண்டவாடி, பட்டிப்பூ ஆரைக்கீரை, நெல்லி வற்றல், இடம் புரிக்காய், வெந்தம், சீந்தில், கருவேலன்பிசின் போன்ற மூலிகைகளை குறிப்பிடலாம்.

எமது பாரம்பரிய உணவுகளில் குரக்கன், வரகு போன்ற தானிய உணவுகளும் வெந்தயம் போன்றவையும் முக்கிய இடம் வகிக்கின்றது.

பாகற்காய், குருவத்தலைப் பாகல் என்றாலே அவை கசப்பானது என்ற எண்ணம்தான் ஏற்படும். அதனால் பலர் இதை விரும்பி உண்பதில்லை. இலை உணவு ஜீரணமாகி அகத்துறிஞ்சப்படுவதை மந்தமாக்குகின்றது.

அவ்விதமே குடலில் குளுக்கோசு அகத்துறிஞ்சப்படுவதையும் மந்தமாக்குகின்றது. ஆனால் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகமாவதை இது கட்டுப்படுத்துகிறது.

நீரிழிவு நோயாளிகள் 1/2 பாகற்காய் சாற்றை அல்லது 3 குருவித் தலைப் பாகல் சாற்றை தினமும் பருகி வரின் நல்ல குணம் கிடைக்கும். அல்லது கறி சமைத்தும் சாப்பிடலாம்.

எமது பாரம்பரிய உணவுகளில் குரக்கன் முக்கிய இடம்பெற்றுள்ளது. தற்போது குரக்கன்மாவை பெரும்பாலும் நீரிழிவு நோயாளர்களே பயன்படுத்துகிறார்கள். இதிலுள்ள காபோவைதரேற்று இலகுவில் ஜீரணம் அடைவதில்லை. அதிக நேரம் குடலில் தங்கி மெதுவாக சிரணமடைவதால் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகரிப்பதும் மட்டுப்படுத்தப்படுகிறது.

மேலும் குரக்கன் குடலில் அதிக நேரம் தங்கி இதிலுள்ள நார்த்தன்மை காரணமாக குடலிலிருந்து நீரை அகத்துறிஞ்சி பெருக்கம் அதன் மூலம் வயிறு நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்படும்.

எனவே பசி அல்லது பசி உணர்வைக் குறைக்கும். நீரிழிவு நோயாளிகளில் உள்ள பிரச்சினைகளில் அடிக்கடி கடும்பசி ஏற்படுவதும் ஒன்றாகும். அதை இவ்விதம் தணிக்கும்.

மேலும் குடலசைவுகளை ஏற்படுத்துவதனாலும் மலத்தை இலகுவில் வெளியேற்ற உதவும். இதனால் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் மலச்சிக்கலையும் தடுக்கும். குரக்கனைப் போலவே வரகரிசியும் பயன் தரும் ஒரு பாரம்பரிய உணவாகும்.

மேலும் ஆவரசு இலை, பொன்னாவரசு இலை, கொவ்வை இலை போன்றவற்றை வறையாக செய்தும் நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தலாம். காய் வகைகளும் அம்பிரலாங்காய், ஜம்புக்காய் தினமும் கிடைக்கும் காலங்களில் சாப்பிடலாம். பப்பாசி பிஞ்சை தோலுடன் கழுவி பின்பு தோலைச்சீவி கப்பி தேங்காய் பாலில் சமைத்தும் எடுக்கலாம்.

தும்பங்காயை கறிசமைத்துச் சாப்பிடலாம். இது நெடுந்தீவு பிரதேசத்தில் மழை காலங்களில் தாராளமாகக் கிடைக்கும்.

நாவல் விதைகள் கிடைக்கும் காலங்களில் விதைகளை சேகரித்து வறுத்து கோப்பிப் பொடிபோல் தயாரித்து கோப்பிக்கு பதிலாக பயன்படுத்தலாம்.

ஆவரசம் பூக்களை சேகரித்து மஞ்சள் துணியில் நிழலில் உலர்த்தி பொடித்து தேநீர் பொடிபோல் பயன்படுத்தலாம்.

ஆரைக்கீரைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு ஆடை நீக்கிய பாலுடன் காலை, மாலை சாப்பாட்டின் பின்பு நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தலாம். நார்த்தன்மையான நிலப்பனங்கிழங்கை தோல்சீவி பாலில் வேக வைத்து கழுவி உலர்த்தி பொடித்து 4-8 கிராம் அளவு ஆடைநீக்கிய பாலில் எடுத்து வர இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

சிறுபூனைக்காலி, பலா பழுத்த இலைகளை சேகரித்து கழுவி சிறிதாக அறிந்து குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு தினம் இரு வேளை அல்லது காலை, மதியம், மாலை இரத்தத்தில் சீனியில் அளவிற்கு ஏற்ப பருகலாம்.

மலைவசம்பு அல்லது வெண்கோட்டத்தின் இலைகள் புளிப்பாக இருக்கும். இதை சலாட்டு போலத் தயாரித்து சாப்பிடலாம்.

சர்க்கரை கொல்லி, சிறுகுறிஞ்சா போன்ற இலைகளை வாயிலிட்டு மென்று சாப்பிட்டு வரலாம். பச்சடி அல்லது வறை செய்தும் பயன்படுத்தலாம். சீந்தில் கொடியின் முற்றிய தண்டிலிருக்கும் சீந்தில்மா அல்லது அமுது சர்க்கரை இதில் 1 கிராம் அளவு எடு த்துவர இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

பொதுவாக எமது பாரம்பரிய உணவுகளில் சிவத்தப்பச்சரியுடன் (நனையவிட்ட) இலைகளை சேர்த்து இடித்து அரித்து களி, பிட்டு போன்றன தயாரித்து பயன்படுத்துவார்கள். இதில் ஆவரசு, ஆரைக்கீரை, சிறுகுறிஞ்சா போன்ற இலைகளைப் பயுன்படுத்தலாம். இவ் இலைகளை இரத்தத்தில் குளுக்கோசின் அளவை கட்டுப்படுத்துவதுடன் காபோவைதரேற்று அகத்துறிஞ்சப்படுவதையும் தடுக்கும்.

பட்டிப்பூ, தொட்டாற்சுருங்கி, தீண்டவாடி போன்ற இலைகளுக்கும் வேருக்கும் இரத்தித்தின் குளுக்கோசின் அளவை கட்டுப்படுத்தம் தன்மை உண்டு. இவைகளை குடிநீராகவோ பொடித்தோ சூரணமாகவும் பயன்படுத்தலாம். கடல் ராஞ்சியானது பருத்த ஏறுகொடி மரமாகும். இதன் வைரமான கட்டைகளில் கப் தயாரித்து அதில் நீரை இரவு முழுவதும் ஊற வைத்து காலையில் அருந்த லாம்.

வெந்தயத்தை ஊறவைத்து அந்த நீரையும் பூருகலாம். அல்லது வெந்தயம், கொத்தமல்லி இரண்டையும் சம அளவு எடுத்து பொடித்து 1 தேக் கரண்டி அளவு பொடிக்கு 200 மில்லி வெந்நீரில் ஊறவிட்ட அருந்தி வந்தாலும் இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்படுத்தலாம்.

மேற்கூறிய மூலிகை உணவுகளை நீரிழிவு வரக்கூடிய சாத்தியம் உடையவர்களும் தடுப்பு முறையாக மேற்கொள்ளலாம்.

நீரிழிவில் பயன்படும் மூலிகைகளும் கறிவேப்பிலையும் முக்கியமானதாகும். அத்துடன் இரும்புச் சத்து, நார்ச்சத்து, கல்சியச் சத்துக்களும் இதில் காணப்படுகின்றது.

எனவே முற்றிய கறிவேப்பிலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை பயன்படுத்தலாம்.

கருவேலமரத்தின் பிசினை நீரில் கரைத்து பொடித்து அருந்தலாம். அல்லது பொடித்து 1 கிராம் அளவு காலை, மாலை எடுக்கலாம்.

நீரிழிவு நோயாளிகள் பசுப் பாலும் வெந்தயம் சேர்த்து நன்கு வற்றக் காய்ச்சி ஆடை நீக்கி பயன்படுத்த வேண்டும்.

மதிய உணவில் சோறு குறைவாகவும் இலைக் கறி, சுண்டல், துவையல் கூடுதலாகவும் சேர்த்துண்ணல் சிறப்பாகும்.

வயிறு அரைவாசி நிரம்பினால் போதும். நீர் போதியளவு அருந்த வேண்டும். காய்கறிகளை பச்சையாக தயாரித்து ஒரு வேளையாவது உண்ணல் வேண்டும்.



# எடுப்பார் கைப்பிள்ளை அரசியல் கலாசாரத்தை மாற்றி அமைக்குக!

## முன்னாள் முதலமைச்சர் வலியுறுத்து

(ஏறாவூர்)

**முஸ்லிம் மக்களுக்கு ஏதேனும் நன்மைகள் கிடைத்தால் அதனைப் பூதாகரமாக்கி மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் கைங்கரியங்களை ஆளும் கட்சிகளாக இருந்த இருதரப்பு அரசியல் வாதிகளும் மிக நேர்த்தியாகவே செய்து வருகின்றனர். அவற்றுக்கு ஏற்றாற்போல் ஒத்து ஊதும் அரசியல்வாதிகளும் நம் மத்தியில் இருக்கவே செய்கின்றனர். இத்தகைய எடுப்பார் கைப்பிள்ளை அரசியல் கலாசாரம் உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் வலியுறுத்தினார்.**

ஏறாவூரிலுள்ள அவரது காரியாலயத்தில் நேற்றுக்காலை

இடம்பெற்ற அமைப்பாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத்

தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர்

மாக இருந்தவர்களில் அரசியல்வாதிகளும்

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் முஸ்லிம் சமூகத்தால் முற்றாக நிராகரிக்கப்பட்ட ஒரு துன்பவியல் நிகழ்வாகும். இதன் பின்னர் இந்த நாட்டிலுள்ள சமூகங்களுக்கிடையிலான உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது. முஸ்லிம்கள் என்றால் வேண்டத்தகாதவர்கள் என்ற உணர்வின் வெளிப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு பின்புல அடங்குவர் என்பது நாம் அறிந்தமையே. அண்மைய ஆட்சிமாற்றத்தின் பின்னர் இந்த உணர்வின் வெளிப்பாடு உச்சம் பெற்றது என்பதற்கும் இன்றைய அமைச்சரவையே கட்டியம் கூறிநிற்கின்றது.

தொடர்ந்தும் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் இந்த அரசாங்கம் செய்ய முனையும் நன்மைகள் குறித்து இப்போது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றை எதிர்க்கட்சியை சார்ந்தவர்களும் முன்வைப்பது பெரும் வேடிக்கையாக இருக்கின்றது. மொத்தத்தில் இந்த நாட்டில் முஸ்லிம்களின் இருப்பு என்பது எடுப்பார்கைப்பிள்ளை என்ற நிலைக்கு இட்டுச்செல்லப்பட்டு விடும் நிலைமையே காணப் படுகின்றது.

இந்த அரசியல் கலாசாரம் உடன் மாற்றப்பட்டு நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்பட வழிவகைகள் செய்யப்பட வேண்டும். இத்தகைய நிலை ஏற்படக்கூடிய வகையில் முஸ்லிம் மக்கள் நன்கு சிந்தித்து தமது சக்தியை ஒற்றுமையுடன் கட்டியெழுப்ப முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுத்துறை மருதங்கேணி வத்திராயன் கிராம அலுவலகத்திற்கு அருகாமையில் 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:—0755935814 (C-819)




யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முதியோர் சங்கம் அண்மையில் நடத்திய முதியோர் கௌரவிப்பு விழாவின் போது யாழ்.நீரிழிவுக் கழகத் தலைவர் தி.மைக்கலுக்கு சிறந்த சமூக சேவகர் விருதினை யாழ். பிரதேச செயலாளர் சா.சுதர்சன் வழங்கிக் கௌரவித்தார்.


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: 24, செவ் 1 இல்
தகைமை/தொழில்: A/L, சிறைச்சாலை பாதுகாப்பு(சார்ஜன்)
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: B/10508

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: செவ் 11 இல்
உயரம்: 5’8”
தகைமை/தொழில்: A/L, கடை சொந்தம்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10509

பிறப்பு: 1991 கிறிஸ்தவம்
தகைமை/தொழில்: O/L, ஹோட்டல் ஊழியர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10510

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: செவ் 11 இல்
உயரம்: 5’7”
தகைமை/தொழில்: A/L, பாடசாலை சிற்றூழியர் (அரச)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10511

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 R.C
நட்சத்திரம்:
கி.பா: செவ் 5 இல்
தகைமை/தொழில்: டிப்ளோமா பட்டதாரி, IT
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/10514

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 43 செவ் 1 இல்
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: டிப்ளோமா, Part time work in UK (PR)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/ 10515

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 34
உயரம்: 5’8”
தகைமை/தொழில்: BA, Accounts Assistant
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/ 10525

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா: 18 1/2 செவ் 12 இல்
உயரம்: 5’2”
தகைமை/தொழில்: LLB, LLM, Lawyer (commercial)
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/ 10528

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கனடா குமரன் விளையாட்டுக்கழகத்தினால் 28.12.2019 அன்று நடாத்தப்பட்ட “குமரன் நைற் 2019” வருடாந்த நிகழ்விற்கு பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**தேசகீர்த்தி கலாநிதி இராசையா குவேந்திரநாதன் தம்பதிகள்**

கௌரவ விருந்தினர்களாக அழைக்கப்பட்டு அவர்களின் தன்னலங்கருதா மனிதாபிமான சேவையினைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

(2779)

சிறி மீனாட்சி நகை அகம்,
183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.
021 222 6109

## எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில்

# மன்னாரில் இந்து மக்கள் சார்பில் சுயேட்சையாக போட்டியிட தீர்மானம்

## மன்.இந்துக்குருமார் பேரவை அறிவிப்பு




(மன்னார்)

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது மன்னார் மாவட்டத்தில் இந்து மக்கள் சார்பாக சுயேட்சை குழு ஒற்று போட்டியிட தீர்மானித்துள்ளதாக மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் தலைவர் சிவசிறி மஹா தர்மகுமார குருக்கள் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று இந்துக் குருமார் பேரவையின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர் கால அரசியல் நிலவரம் தொடர்பாகவும் இந்து மக்களை அழைத்து ஆராய்ந்த போது மக்கள் சில ஆணைகளை எமக்கு வழங்கியுள்ளார்கள்.

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி தேர்தல் தொகுதியில் சுயேட்சைக் குழுவாக போட்டியிட உள்ளோம். மக்களும் இக்கருத்தையே முன்வைக்கின்றனர். ஏன் நாங்கள் சுயேட்சையாக போட்டியிட வேண்டும் என்ற கேள்வி உள்ளது.

கடந்த 2 பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு முன்பாக நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் மன்னார் மாவட்டத்தில் எங்களுக்கு ஒரு பிரதிநிதியை கேட்டிருந்தோம். ஆனால் கைகூடாமல் போய் விட்டது.

இந்த முறையும் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடங்களுடன் இவ்விடயம் தொடர்பாக கதைத்த போதும் அவர்கள் மன்னார் மாவட்டத்தில் இருந்து ஒரு இந்து சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கான ஆசன ஒதுக்கீடு வழங்க அவர்கள் விரும்பவில்லை. ஆசன ஒதுக்கீடு தரவும் இல்லை.

அதன் அடிப்படையில் எங்களுடைய மக்கள் நாங்கள் சுயேட்சையாக போட்டியிட வேண்டும் என்றும் மன்னார் மாவட்டத்தில் இருந்து ஒரு வேட்பாளர் நிச்சயம் பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்தில் இருக்கின்றவர்களும் ஒவ்வொரு சமயத்தில் இருக்கின்றவர்களும் தங்களுடைய பிரதிநிதிகள் வர வேண்டும் என விரும்புகின்ற போது எங்களுக்காக குரல் கொடுக்கக்கூடிய ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எங்களுடைய சமூகத்தில் இல்லாத காரணத்தினால் நாங்கள் இம்முறை மன்னாரில் இருந்து ஒரு வேட்பாளரை சுயேட்சையாக போட்டியிட வைக்க முடிவு செய்துள்ளோம்.

இந்த சுயேட்சை அமைப்பானது தமிழ்த் தேசியத்திற்கு எதிரானதாகவோ அல்லது ஆளும் கட்சி, ஏனைய அரசியல் கட்சிகளுக்கு எதிரான ஒரு கட்சியாக இயங்கப் போவது இல்லை.

நாங்கள் எங்களுடைய அடிப்படை உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கும், எங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு எங்களுக்காக குரல் கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய ஒரு தேவை காலத்தின் கட்டாயமாக உள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆலயத்தின் பிரதிநிதிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், கல்வியாளர்கள் போன்றவர்களை அழைத்து அவர்களிடம் ஆலோசனைகளை கேட்டோம்.

அதற்கமைவாக எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிட்டு எங்களுக்குரிய தீர்வுகளை பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக நாங்கள் உருவாக வேண்டும் என்ற கருத்தை அவர்கள் முன்வைத்தனர்: அதற்கமைவாக மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது.

எந்த எந்த மாவட்டங்களில் யாரை வேட்பாளர்களாக நியமிப்பது என்பது தொடர்பில் நாங்கள் கலந்து ஆலோசித்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் பிரதிநிதிகள், இந்துக் குருக்கள் பலர் கலந்து கொண்டனர். (9-285)

## வன்னியில் பொதுமக்களின் காணிகள் அபகரிப்பு

# வனவள திணைக்களத்துக்கு எதிராக அமைச்சரிடம் பல முறைப்பாடுகள்





(நெளுக்குளம்)

வன்னி மாவட்டத்தில் வனவள திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் மற்றும் வனவிலங்குகளால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை, தீர்க்கும் விதமான கலந்துரையாடல் ஒன்று வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க தலைமையில் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

இதன்போது வனவள திணைக்களம் காணிகளை விடுவிக்காததால் பல்வேறு காணிகளிற்கான அனுமதிப்பத்திரங்களை பொது மக்களிற்கு வழங்கமுடியாமல் இருப்பதாக பிரதேச செயலாளர்களால் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக வவுனியா வடக்கு காஞ்சுரமோட்டை பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் இந்தியா உட்பட பல்வேறு பகுதிகளிற்கு இடம்பெயர்ந்து மீண்டும் மீளக் குடியமர்ந்த நிலையில் அவர்களது 400 ஏக்கர் அளவிலான காணிகள் வனவள திணைக்களத்தால் எல்லைப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் நீண்டகாலத்தின் பின்னர் மீளத்திரும்பிய மக்கள் தமது காணிகளை அடையாளப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வதாக பொது அமைப்புகளால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

போரால் பொதுமக்கள் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் அவர்களது காணிகளில் காடுகள் வளர்ந்துள்ளமையால் அவற்றை வனவள திணைக்களம் எல்லையிட்டுள்ளதாகவும், எமது காணிக்குள் பழைய கட்டடங்கள், கிணறுகளின் எச்சங்கள் இருக்கும் நிலையிலும் அவை தொடர்பில் கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும் கிராம பொது அமைப்புகளால் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவை தொடர்பாக தொடர்புடைய திணைக்களங்களின் அதிகாரிகளிடம் விளக்கம் கோரிய அமைச்சர் பொதுமக்களின் நலன் கருதி இவ்விடயங்களில் கவனம் செலுத்துமாறும் தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், ஒருங்கிணைப்பு குழு தலைவர் தர்மபால, வன்னி மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (9-299)

## பூநகரி பகுதியில் 956 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை

(அக்கராயன்)


கிளிநொச்சி பூநகரி கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 561 ஏக்கரிலும் குடமுருட்டிக் குளத்தின் கீழ் 395 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கான கூட்டம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) எஸ்.திருலிங்கநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.செந்தில்குமரன், கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.அற்புதச்சந்திரன், கிளிநொச்சி மாவட்டச்செயலக உதவித்திட்டமிடல்பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் உட்பட துறைசார்ந்த அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(9-350)

## காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கு ஆளுநரால் விசேட குழு நியமனம்

### 49 பிணக்குகள் நேற்று விசாரணைக்கு



(அக்கராயன்)

வடக்கில் நிலவுகின்ற தீர்க்கப்படாத காணிப் பிணக்குளை தீர்ப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநரால் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதி இராசேந்திரன் வசந்தசேனன் தலைவராகவும் மாகாண கணக்காய்வுத் திணைக்கள அதிபதி சுரேஜினி சந்திரசேகர், நடராசா இரத்தினம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு இக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்று கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் தங்களது பணிகளை ஆரம்பித்துள்ளனர். தீர்க்கப்படாதிருந்த 49 காணிப்பிணக்குகள் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (9-350)




## மகா சிவராத்திரியை முன்னிட்டு கிளிநொச்சியிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பேருந்து சேவை

(கிளிநொச்சி)

மகா சிவராத்திரியை முன்னிட்டு கிளிநொச்சியில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பேருந்து சேவை கிளிநொச்சி சாலையிலிருந்து எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணி முதல் பயணிகளின் வருகைக்கேற்ப இடம்பெறவுள்ளதாக கிளிநொச்சி சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். இன்று காலை 8.30 மணியிலிருந்து ஆசன முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளார். (9)

# மர்மமான முறையில் மாடுகள் இறப்பு; வாழ்வாதாரத்தை இழக்கும் வவு. மக்கள்

(குருமன்காடு)

வவுனியாவில் உள்ள வயல் வெளிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக உயிரிழந்து வரும் மாடுகளினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் அச்ச நிலையும் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில், வவுனியா நெளுக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட குழுமாட்டுச்சந்தி பகுதிக்கு அண்மையுள்ள வயல் நிலப் பகுதியில் கடந்த சில நாட்களாக மேய்ச்சலில் ஈடுபட்ட மாடுகள் சில உயிரிழந்துள்ளன.

இதன் காரணமாக அப்பகுதியில் துர்நாற்றம் வீசி வருவதுடன் மாடு வளர்ப்பாளர்கள் அச்சத்துடன் இருந்து வருகின்றனர். சில மாடுகள் உயிருக்குப் போராடி வருகின்றன. இதனால் பல குடும்பங்கள் தமது



வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். இது தொடர்பில் வவுனியா அரச கால்நடை வைத்திய அலுவலகத்தினை தொடர்பு கொண்டு கேட்ட போது,

எமது அலுவலகத்தில் பணியாற்றும் கால்நடை வைத்தியர் சுகயீன விடுமுறையில் உள்ளமையினால் எம்மால் சம்பவ இடத்திற்கு சமுகமளிக்க முடியாது எனத் தெரிவித்துடன் பதில் கடமைக்கு எவரும் இல்லையெனவும் பதில் தெரிவித்தனர்.

மேலும் உயிரிழந்த மாடுகள் அப்பகுதியில் இருந்து அகற்றப்படாமையினால் துர்நாற்றம் வீசுகின்றது. இதன் காரணமாக மக்கள் அப்பகுதியூடாக அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே பயணிக்க முடிகிறது.

அண்மைய நாட்களாக கடும் வெப்பமும் தூசு மண்டல தாக்கமும் வவுனியாவில் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறு மாடுகள் இறந்து வருகின்றமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், மாடு வளர்ப்பை ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. (9-250)

## அட்டமஸ்கடவில் வயல் விழா



(நெளுக்குளம்)

வவுனியா அட்டமஸ்கடவில் வயல் விழா நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அட்டமஸ்கட விகாரையின் பிரதம குருவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் சமன் பந்துலசேன, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலாளர் ஜானக்க, நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், பிரதிமாகாண விவசாய பணிப்பாளர் சகிலாபானு, இராணுவத் தளபதி, விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அறுவடை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (9-299)

## ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்



(கண்டாவளை)

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரியின் குறைபாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேற்று விஜயத்தினை மேற்கொண்டு மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், தொழில்நுட்பக்கல்லூரியின் அதிபர் எர்வின் சூஸ். மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். (9-315)

## சான்றிதழ் வழங்கலும் சின்னம் சூட்டுதலும்

(மன்னார்)

மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் தலைமைத்துவ பயிற்சியை வழங்கும் நோக்குடனும் ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட நல்லிணக்க செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அத்துடன் தொண்டர் அடிப்படையில் ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பினூடாக நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் இளைஞர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்று மன்/அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையில்



ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜோசப் நயன் தலைமையில் இடம்பெற்றது

குறித்த நிகழ்வில் மன்/அல் அஸ்ஹர் பாடசாலையின் அதிபர் மாஹீர், ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பினுடைய பிராந்திய இணைப்பாளர் அனிலவன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-285)

# நெல் சந்தைப்படுத்தலில் விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை தீர்க்க ப.நோ.கூ.சங்கங்களுக்கு 16மில். உதவி

## வடமாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உலகவங்கியின் நிதி உதவியுடன் விவசாயத்தினை நவீனமயப்படுத்துகின்ற திட்டம் மற்றும் காலநிலை சீரமைப்பிற்கான விவசாய நீர்ப்பாசனத் திட்டம் என விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தியுடன் தொடர்புடைய இருவேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதம செயலர் ஏ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நெல்லினுடைய சந்தை விலையைத் தக்கவைப்பதற்காகவும் விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தலில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைத் தீர்ப்பதற்காகவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லினைப் பெற்றுக்கொள்வதற்காக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 16 மில்லியன் ரூபாவினை ஆளுநரின் பணிப்பின் பேரில் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - முத்தையன் கட்டு பிரிவிற்குரிய நீர்ப்பாசப் பொறியியலாளர் பணிமனைத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

குறிப்பாக விவசாயத்தினை நவீனமயப்படுத்துகின்ற திட்டத்தினைப் பொறுத்தவரையில், இத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு இத்திட்டத்திலே முத்தையன்கட்டும் உள்வாங்கப்பட்டு குளத்தின் கீழே வருகின்ற பகுதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அதேபோல கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் வரை இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. காலநிலை சீரமைப்பிற்கான விவசாய, நீர்ப்பாசனத் திட்டத்தினைப் பொறுத்தவரையில், அதிலே இரண்டு ஆற்றுப் படுக்கைகள் வடக்கு மாகாணத்திலே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆற்றுப்படுக்கைகளாக முல்லைத்தீவில் பேராறு ஆற்றுப் படுக்கை மற்றும் கிளிநொச்சியிலே மண்டைக்கல்லாறு ஆற்றுப்படுக்கை என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே இந்த பேராறு ஆற்றுப்படுக்கையிலே வருகின்ற அதோடு தொடர்பான சகல சிறு நீர்ப்பாசனக் குளங்களும் சகல விவசாய உட்கட்டுமானங்களும் விவசாய வீதிகளும் இதிலே புனரமைப்புச் செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

தற்போது அதற்கான மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வருகின்ற ஜுன் மாதத்திற்கு முன்பு இதற்கான கேள்விகள் கோரப்படும். இந்தத் திட்டங்கள் வருகின்றபோது, பொருளாதார முதுகெலும்பாக இருக்கின்ற விவசாயத் துறை, அதிலே தங்கியிருக்கின்ற விவசாயிகளினுடைய பொருளாதாரம் மேலும் சிறப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

பல குறைபாடுகளும் இருக்கின்றன. தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள ஆளுநர் விவசாயத்தினுடைய உற்பத்தி விலைகளைத் தக்கவைப்பதற்காக குறிப்பாக நெல்லினுடைய சந்தை விலையைத் தக்கவைப்பதற்காக விசேட அனுமதியை வழங்கியிருக்கின்றார்.

அதற்கேற்ப நாங்கள் இயலுமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 16 மில்லியன் ரூபாய் கொடுத்திருக்கின்றோம். அவர்கள் ஆறு மாதத்திற்குள்ளே நெல் வியாபாரத்தினை மேற்கொண்டு அந்தப் பணத்தினை எங்களுக்குத் திருப்பித் தரவேண்டும். அவர்களுக்கு இதில் நிறையவே இலாபம் இருக்கின்றது. இவ்வாறாக ஆளுநரின் பணிப்பிற்கமைய, அவரின் அனுமதியுடன் வடமாகாணத்தில் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என மேலும் தெரிவித்தார். (9)

# கிளி-முல்லை மாவட்டங்களில் சட்டவிரோத செயற்பாடுகளை

## கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்



(அக்கராயன்)


கிளிநொச்சி சிந்தனையாளர் வட்டத்தின் பிரதிநிதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா எச்.ஏ.என்.கே.தமிந்த விஜயசிறியை இரணைமடுவிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் அண்மைக்காலமாக பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்த சிந்தனையாளர் வட்டத்தினர் மாவட்டத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் கடத்தல், மரம் வெட்டுதல், கசிப்பு, கஞ்சா, குழு மோதல்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், இளைஞர்களின் விதிமுறைகளை மீறிய போக்குவரத்து செயற்பாடுகள் உள்ளிட்ட சட்டத்திற்கு புறம்பான அனைத்து செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவது மற்றும் பொதுமக்கள் இளைஞர்கள், மாணவர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் கலந்துரையாடினர்.

பொலிஸார் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கிடையே சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் பரஸ்பர ஒத்துழைப்பு பற்றியும் பேசப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் தனக்கு சில மாதங்கள் காலஅவகாசம் தருமாறு மாவட்டத்தில் இடம் பெறுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதாகவும் தெரிவித்த அவர் சுற்றுச் சூழல் பாதுகாப்பு விடயத்தில் தான் அதிகம் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார். (9-350)

# பாரதம்

## நிர்பயா கொலைக்குற்றவாளிகள் 4 பேருக்கும் 3 ஆவது முறையாக மரண தண்டனை விதிப்பு




(டில்லி)
நிர்பயா வழக்கில் மரண தண் டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் 4 பேருக்கும் நேற்று முன்தினம் மூன்றாவது முறையாக டில்லி நீதிமன்றம் மரண தண்டனைக் கான ஆணையை பிறப்பித்தது.

இதன்படி குற்றவாளிகள் 4 பேருக்கும் மார்ச் 3 ஆம் திகதி காலை 6 மணிக்குள் மரண தண்டனையை நிறைவேற்ற டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஏற்கனவே கடந்த ஜனவரி 22 ஆம் திகதி முதல் மரண தண்டனையும் அதன்பின் பெப் ரவரி 1 ஆம் திகதி 2 ஆவது மரண தண்டனைக்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.


ஆனால், குற்றவாளிகள் தங் களுக்கு இருக்கும் சட்ட வாய்ப்பு களைப் பயன்படுத்தி தண்டனை யைத் தள்ளிப்போட்டனர். இறுதி யாக ஜனவரி 31 ஆம் திகதி, விசாரணை நீதிமன்றம் மரண தண்டனையை நிறுத்தி உத்தர விட்டது குறிப்பிடத்தக்கது.

டில்லியில் கடந்த 2012 ஆம் ஆண்டு மருத்துவ மாணவி நிர் பயா பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்ய பட்டார். இந்த வழக்கில் அக்சய் குமார் சிங், பவன் குப்தா, வினய் ஷர்மா, முகேஷ் சிங் ஆகிய 4 பேருக்கு டில்லி விசாரணை நீதி மன்றம் மரண தண்டனை வழங் கித் தீர்ப்பளித்தது.

ஜனவரி 22 ஆம் திகதி, பெப்ரவரி 1 ஆம் திகதி என இரு முறை குற்றவாளிகள் 4 பேருக் கும் டில்லி விசாரணை நீதிமன் றம் மரண தண்டனை விதித்தது.

ஆனால், இருமுறையும் குற்ற வாளிகள் ஜனாதிபதி கருணை மனுத் தாக்கல் செய்ததால் தண் டனையை ஒத்திவைத்து டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## பாகிஸ்தானில் பயங்கரவாத புகலிடமில்லை
### இம்ரான்கான் திட்டவட்டம்



(இஸ்லாமாபாத்)
கடந்த காலத்தில் நிலைமை எப்படி வேண்டுமானாலும் இருந் திருக்கலாம். ஆனால் இப்போது பாகிஸ்தானில் பயங்கரவாத இயக்கங்களின் புகலிடம் எதுவும் இல்லை என்று பிரதமர் இம்ரான் கான் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அரசு தலிபான், லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது போன்ற பயங்கரவாத இயக்கங்களுக்கு புகலிடம் அளிப் பதாக இந்தியா, அமெரிக்கா, ஆப் கானிஸ்தான் ஆகிய நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன.

இந்நிலையில் இஸ்லாமாபாத் தில் நடைபெற்ற ஒரு சர்வதேச கருத்தரங்கில் அந்நாட்டு பிரதமர் இம்ரான்கான் உரையாற்றும் போது, "கடந்தகாலத்தில் நிலைமை எப்படி வேண்டுமானாலும் இருந் திருக்கலாம்.

ஆனால் இப்போது பாகிஸ்தா னில் பயங்கரவாத இயக்கங்க ளின் புகலிடம் எதுவும் இல்லை. இப்போது எங்களுக்கு ஒரே தேவை, ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவ வேண்டும் என்பதே" எனத் தெரி வித்தார்.

இந்த கருத்தரங்கில் ஐ.நா. பொதுச்செயலாளர் அண்டோ னியோ குட்டேரசும் கலந்து கொண்டார். (ஐ-2)

## சூடானுடன் புத்துயிர் பெறும் இஸ்ரேலின் உறவு



(கார்டூம்)
சூடானின் முக்கிய தலைவர் அப்தெல் ஃபதாக் அல் புர்ஹானை, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சந்தித்துப் பேசியதை தொடர்ந்து, இருநாடுகளுக்கி டையில் துவண்டு போயிருந்த உறவு புத்துயிர் பெறத் தொடங் கியுள்ளது.

இதன் ஒரு முன்னேற்ற கட்ட மாக, சூடான் வான் பரப்பில் தங் கள் நாட்டு விமானம் முதன் முறையாக பறந்ததாக இஸ்ரே லிய பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு அறிவித்தார்.

சூடான் மற்றும் இஸ்லாமியர் களை அதிகம் கொண்ட நாடுக ளில் இஸ்ரேல் அரசு இணக்க முடன் செயற்பட்டு வருவதை இந்த சம்பவம் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக் கையில், 'சூடான் வான் எல் லையை இஸ்ரேலிய விமானம் முதன்முறையாக கடந்து சென் றது. இது ஒரு நல்ல முன்னேற் றம்.

இஸ்ரேலின் வெளியுறவுக் கொள்கை என்ற பனிப்பாறை யில் இது ஒரு முனை மட்டுமே. அதாவது 10 சதவீதம் மட்டுமே வெளியே கண்களுக்கு புலப்படு வதாக உள்ளது. வரும் நாட்க ளில் பெரிய அளவிலான மாற்றங் களை காணலாம்' எனக் கூறி னார்.

சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷீரின் ஆட்சிக் காலத்தின்போது அல் கொய்தா பயங்கரவாதிகளு க்கு ஆதரவளித்ததையடுத்து சூடானுடன் இஸ்ரேல் மறைமு கப் போரில் ஈடுபட்டு வந்தது.

சூடானில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்த தையடுத்து அந்த நாட்டு இரா ணுவம் கடந்த ஏப்ரலில் பஷீரை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக் கியது.

இந்தச் சூழ்நிலையில், இர ண்டு வாரங்களுக்கு முன்பு சூடா னின் முக்கிய தலைவர் அப்தெல் ஃபதாக் அல் புர்ஹானை நெதன் யாகு சந்தித்துப் பேசியதையடு த்து. இரு நாடுகளுக்கும் இடை யில் நல்ல உறவு மலர்ந்துள் ளது. (ஐ-2)

## ஒரே
## அதிகரிக்கும் [...]
## உயிரிழப்பு அ[...]

(பீஜிங்)
சீனாவில், 'கொரோனா' வைரஸ்[...]
எண்ணிக்கை 1,870 ஆக உயர்ந்துள்ளத[...]
பேருக்கு இதன் பாதிப்பு இருப்பது உறு[...]

18 முக்கிய நகரங்கள் உள்ள ஹூபய் மாகாணத்தில் மிக அதி கமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வைரஸ் பாதிப்பு முதலில் தென்பட்ட வுஹான் நகரிலேயே உயிரிழ ப்புக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவுள்ளது. நேற்று முன்தினம் ஒரே நாளில் 95 பேர் உயிரிழந்தனர்.

## சிரியாவின் அட்டூழியங்க[...] ஆதரவளிப்பதை ரஷ்யா நிறுத்[...]
### ட்ரம்ப் ஆவேசம்

(வோஷிங்டன்)
இட்லிப் பகுதியில் சிரிய அரசு செய்யும் அட்டூழியங்களுக்கு ஆதரவு அளிப்பதை ரஷ்யா நிறு த்த வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.


மேலும், இது தொடர்பாக துரு க்கி ஜனாதிபதி எர்டோகனிடம் ஜனாதிபதி ட்ரம்ப் தொலைபேசி யில் பேசியுள்ளார் என்றும் இது குறித்து வெள்ளை மாளிகை வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டது.

சிரியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள அலெப்போவில் கிளர்ச்சியாளர் கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த சில நாட்களாக ரஷ்யாவின் உதவியுடன் அரச படைகள் தாக்குதல் நடத்தி வருகின் றன.

இதில் போர் விமானங்களைக் கொண்டு கடுமையான தாக்குதல் நேற்று முன் தினம் நடத்தப்பட்டதுடன், கிளர்ச்சியாளர் கள் வசம் இருந்த பெரும்பாலான பகுதி கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த சில நாட்களாக சிரியாவில் அந்

## பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல் 10 பேர் பலி; 35 பேர் படுகாயம்!



## வெளிநாடு

# ...ரே நாளில் 95 பேர் பலி

# ...் கொரோனாவின் தாண்டவம்

# ...ஆயிரத்து 870 ஆக உயர்வு!

**...வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தோரின் ...துள்ளதுடன் இதுவரை 72 ஆயிரத்து 436 ...து உறுதி செய்யப்பட்டது.**



அதையடுத்து உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 1,870 ஆக உயர்ந்துள்ளது. புதிதாக 1,888 பேருக்கு வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களையும் இணைத்து 72 ஆயிரத்து 436 பேருக்கு இந்த வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. (ஜ-2)

## ...பங்களுக்கு ...றுத்த வேண்டும்

நாட்டு ஜனாதிபதி ஆசாத் நடத்தும் தாக்குதலை மனித உரிமை அமைப்புகள் கடுமையாகக் கண்டித்துள்ளன.

முன்னதாக, சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில் ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டுவிட்டன.

போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அயல் நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)



(இஸ்லாமாபாத்)

தென்மேற்கு பாகிஸ்தானில் பொலிஸ் வாகனத்தின் அருகே மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சுமார் 10 பேர் உயிரிழந்ததுடன் 35 பேர் வரை காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் குவாட்டா நகர்ப் பகுதியில் சன்னி முஸ்லிம் மக்களின் பேரணியில் தாக்குதல் நடத்த முற்பட்ட குறித்த தற்கொலைக் குண்டுதாரியை பொலிஸார் தடுக்க முற்பட்ட போது குறித்த நபர் தன்னைத் தானே வெடிக்க வைத்தார்.

இந்நிலையில் குறித்த தாக்குதலில் இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 10 பேர் உயிரிழந்த நிலையில் சுமார் 35 பேர் வரை படுகாயம் அடைந்தனர். (ஜ-2)

# தேவாலயத்தில் கொடூரத் தாக்குதல்; 24 பேர் பலி; 18 பேர் படுகாயம்



(புர்கினா)

வடக்கு புர்கினா பாசோவில் உள்ள தேவாலயம் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குலில் 24 பேர் உயிரிழந்துள்ளதோடு, 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வாராந்தர ஆராதனையின் போது, பன்சி கிராமவாசிகள் மீது ஆயுதமேந்திய பயங்கரவாதிகள் குழுவொன்று இந்தத் தாக்குதலை நடத்தியது.

இதன்போது காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சிலர் கடத்தப்பட்டிருக்கலாம் எனவும் பிராந்திய ஆளுநர் கர்னல் சல்போ கபோரே தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்கு முன் எந்தவித வன்முறையும் இல்லாதிருந்த இந்நாட்டில் மேற்கு ஆபிரிக்க நாடான மாலியின் வடக்குப் பகுதியில் தொடங்கிய ஜிகாதிகளின் கிளர்ச்சி வேகமாக கிழக்கை நோக்கி அயல் நாடான புர்கினா பாசோவிற்கும் வந்தடைந்தது.

2015 ஆம் ஆண்டு முதல் புர்கினா பாசோவில் ஜிகாதி கிளர்ச்சிக் குழு நடத்தி வரும் தாக்குதலுக்கு சுமார் 750 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும், சுமார் 600,000 பேர் உயிருக்கு அஞ்சி தமது பூர்வீக இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர்.

ஐ.நாவின் புள்ளிவிபரங்களின் படி, கடந்த ஆண்டு புர்கினா பாசோ மற்றும் அயல் நாடான மாலி மற்றும் நைஜரில் நடந்த ஜிகாதி தாக்குதல்களில் ஏறத்தாழ 4 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைய காலங்களில் பிரான்ஸ் மற்றும் அமெரிக்க படைகளின் பயிற்சியும் உதவியும் இருந்தபோதிலும் புர்கினா பாசோவின் இராணுவத்தால் வன்முறையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

புர்கினா பாசோவின் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் 2 ஆயிரம் வீரர்களை நியமிக்க முயற்சிக்கிறது.

மேலும் தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் பொது மக்களைப் பயன்படுத்த நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சஜித்திடம் நாட்டுப்பற்றை கூட்டமைப்பு கற்க வேண்டும்

## பந்துல பரிந்துரை

**(கொழும்பு)**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கொண்டுள்ள நாட்டுப்பற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கற்றுக்கொள்ள வேண்டுமென அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்தார்.**

இராணுவத் தளபதி லெப்டி னன் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர் அமெரிக்காவிற்கு நுழையத் தடை விதிக்கப்பட்டது.

இதற்கு தமிழ்த் தேசியக்கூட் டமைப்பு ஆதரவு தெரிவித்து அறி க்கை வெளியிட்டுள்ளமை தொடர் பாக கருத்துத் தெரிவிக்கும் போதே பந்துல மேற்கண்டவாறு கூறி னார். "பிரிவினைவாதத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்து வதிலேயே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் குறியாக இருக்கின் றனர்.

இராணுவத் தளபதிக்கும் அவ ரது குடும்பத்தாருக்கும் அமெரிக்க அரசாங்கம் விதித்துள்ள தடையை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வரவேற்று ஆதரித்திருப்பது மிகு ந்த கவலையளிக்கின்றது.

இதேவேளை இராணுவத் தள பதிக்கு பக்கச்சார்பான அமெரிக்க அரசாங்கத்தின் தீர்மானத்தை சஜித் பிரேமதாஸ கண்டித்துள் ளதை நாம் வரவேற்கின்றோம்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினரும் இவ்விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவரை முன்னு தாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டும்.



அதாவது சஜித் பிரேமதாஸ விடம் காணப்படுகின்ற நாட்டுப் பற்றை கூட்டமைப்பினரும் கற்றுக் கொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எம்.சி.சி. குறித்து ஆராய்வதற்கான குழுவின் ஆரம்ப அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் திட்டம் (MCC மிலேனியம் சலென்ஞ் கோப்பரேஷன்) தொடர்பாக ஆரா ய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபு ணர் குழுவின் ஆரம்ப அறிக்கை நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையுளிக்கப்பட்டது.

2019 டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி அமைச்சரவை மேற்கொ ண்ட தீர்மானத்தின்படி ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நான்கு பேர் கொண்ட குழு நிய மிக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழகத் தின் பொருளியல் துறை பேரா சிரியர் லலிதசிறி குணருவன் இக்குழுவின் தலைவராக கடமை யாற்றுகின்றார்.

போக்குவரத்து அமைச்சின் முன்னாள் செயலாளர் கலாநிதி டி.எஸ்.ஜயவீர மற்றும் ஜனாதி பதி சட்டத்தரணி நிஹால் ஜயவ ர்த்தன மற்றும் பட்டய கட்டடக் கலைஞர் நாலக்க ஜயவீர ஆகி யோர் ஏனைய உறுப்பினர்களா வர்.

சுயாதீன தொழிலின்மை பகுப் பாய்வு ஒன்று இக்குழுவிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது: அந்த வகையில் பல்வேறு துறைகளை யும் உள்ளடக்கிய வகையில் விரி வானதொரு பகுப்பாய்வு மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆவணங்களை ஆராய்தல், பல்வேறு தரப்புக்கள், குழுக்கள் மற்றும் தனிநபர்களுடனான கல ந்துரையாடல்கள் மற்றும் மாநாடு களில் பங்குபற்றி தகவல்களை திரட்டுவதற்கும் இக்குழு நடவ டிக்கை எடுத்துள்ளது. மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனம் குறித்து முழுமையான அறிக்கை 4 மாத ங்களுக்குள் சமர்ப்பிக்கப்படவுள் ளது. (இ-7)

# வடதாரகை, நெடுந்தாரகை சேவையில் ஈடுபடாது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ள கச்சதீவு அந்தோனியார் ஆல யத் திருவிழாவுக்கான பட குச் சேவையில் வடதாரகை மற் றும் நெடுந்தாரகை சேவையில் ஈடுபடாது எனத் தெரிவிக்கப்பட் டது.

வடதாரகைப் படகின் தொழில் நுட்ப ரீதியான பகுப்பாய்வுக்காக பெருமளவு நிதி தேவைப்படுகின்ற நிலையில் அதனை மேற்கொள் வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் துரிதமாகச் செயற்படாத காரணத்தால் இந்நிலை ஏற்பட்டு ள்ளது.

இதேவேளை நெடுந்தார கைப் படகு கச்சதீவு செல்வத ற்கான வழி அனுமதிப் பத்திரம் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது என மேலும் தெரிவிக்கப்பட் டது. (இ-10)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பிறருக்காக...

அந்தக் காலத்திலே எத்தனையோ முனிவர்கள் இந்த நாட் டிலே இருந்திருக்கிறார்கள்! அதில் கனாதர் என்று ஒரு ரிஷி!

அப்பப்பா அவரிடம் பலபேர் வருவது உண்டு. உபதேசம் வாங்கிக் கொண்டு போவதற்கு! ஒருநாள் அது மாதிரி ஒரு நான்கு பேர் அவரைத் தேடிக்கொண்டு வந்தார்களாம். முனிவர் அவர்களை நிமிர்ந்து பார்த்தார். நாளைக்கு காலையில் சூரியன் உதய மாகின்ற சமயத்திலே இங்கே வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

சரி என்று சொல்லி விட்டுப் போனார்கள்... அடுத்த நாள் காலையிலே முனிவர் சொன்ன நேரத்துக்கு வந்தார்கள். அந்த சமயத்தில் அந்த முனிவர் ஒரு யாகம் செய்துகொண்டிருந்தார். வந்த நான்கு பேரும் அதைப் பார்த்து விட்டு அவருக்கு ஒத்தாசை பண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

யாகம் முடிவதற்கு ரொம்ப நேரம் ஆகிவிட்டது. இந்த நாலு பேரும் காலையில் வந்தவர்கள். இதுவரைக்கும் சாப்பிடவே இல்லை. பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. என்ன செய்யலாம் என்று நினைத்து புறப்பட்டார்கள்.

முனிவர் அவர்கள் புறப்படுவதைப் பார்த்தார் உடனே தடுத்து நிறுத்தினார்.

நீங்கள் எதற்கு வீட்டுக்குப் போக வேண்டும்? இங்கே ஆச்சி ரமத்திலே சாப்பாட்டுக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிறேன். அத னால் நீங்கள் உடனே ஆச்சிரமத்துக்குப் போங்கள். நான் பின் னால் வருகிறேன் என்றார். இதைக் கேட்டவுடனே அந்த நான்கு பேரும் ஆச்சிரமத்திற்குப் போனார்கள்.

அங்கே வாசலில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்தி ருந்தார்கள்... இவர்கள் கை கால்களை கழுவிக்கொண்டு உள்ளே நுழையப் போனார்கள்.

அந்த சமயம் பார்த்து அங்கே இருந்த நான்கு முரட்டு ஆசாமி கள் அவர்கள் முன்னால் வந்து நின்றார்கள். இங்கே சாப்பிடு பவர்களுக்கு ஒரு நியமம் உண்டு. என்ன தெரியுமா? இதோ இருக்கு பாருங்கள்... இந்த மூங்கில் சிம்புகளை உங்க முழங்கை யிலே வைத்த கட்டிப் போடுவோம். அதற்கு நீங்கள் சம்மதி க்கவில்லை என்றால் உங்களைக் கொன்று போடுவோம் என்றார்கள்.

அப்படிச் சொன்னதோடு நிற்கவில்லை. கத்தியை எடுத்துக் காட்டினார்கள். அதற்குப் பின்னர் அவர்கள் என்ன வேணாம் என்றா சொல்ல முடியும்? பயந்து கொண்டு கையை நீட்டினார்கள். அவர்கள் மூங்கில் கம்பை வாங்கிக் கட்டினார்கள்... இவர்கள் எல்லோரும் நீட்டிய கையை மடக்க முடியவில்லை... அப்படியே உள்ளே போனார்கள். நாலு இலைகள் எதிரும் புதிருமாக போடப்பட் டிருந்தார்கள்... அதிலே பலகாரம் எல்லாம் வைத்திருந்தார்கள். லட்டு எல்லாம் இருந்தது.

இலைக்கு முன்னால் உட்கார்ந்திருந்தார்கள்... இருந்தாலும் எப்படிச் சாப்பிட முடியும்? அதுதான் கையிலே சிம்பு வைத்து கட்டியிருக்கிறார்களே... முழங்கையை மடக்க முடியவில்லை... அவர்கள் பாட்டுக்கு உட்கார்ந்திருந்தார்கள்...

இந்த சமயத்தில் முனிவர் உள்ளே வந்தார். என்ன இது? ஏன் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்! கூச்சப்படாமல் சாப்பிடு ங்கள்... என்றார். இவர்களுக்கு எரிச்சல் இருக்காதா பின்ன! முழங்கையை மடக்க முடியவில்லை... எப்படி சாப்பிடுவது? என்றார்கள்.

இதைக் கேட்டதும் முனிவர் சிரித்தார். அவர்களைப் பார்த்துச் சொன்னார் இதோ பாருங்கள்... உங்க கையில் இருக்கின்ற லட்டு உங்கள் வாய்க்குத்தான் போக வேண்டும் என்று அவசியமில்லை. அந்த லட்டு எதிர்ப்பக்கம் உட்கார்ந்திருக்கிறவருக்கு போகலாமே! அந்த மாதிரி எதிரில் இருக்கிறவன் கையில் இருக்கின்ற லட்டு வாய்க்குள்ளே போகலாமே என்றார்.

அப்பதான் இவர்களுக்கு புத்தி வந்தது. முழங்கையை மடக்க முடியாமல் கட்டியிருந்தாலும் அடுத்தவன் சாப்பிடுவதற்கு அது உபயோகப்படும் என்பது புரிந்தது.

முனிவர் சிரித்துக் கொண்டே சொன்னார். உங்களுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுப்பதற்கத்தான் இப்படிப் பண்ணினேன். நாம் சம்பாதிக்கின்ற பணம் எமக்குத்தான் பயன்படும் என்பதில்லை. அது அடுத்தவர்களுக்கும் உபயோகப்படலாம். ஒருத்தருக்கொரு த்தர் உதவியாக இருப்பதுதான் வாழ்க்கை.

அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்குத்தான் இப்படி முழங்கைகைய கட்டி உங்களைச் சாப்பாட்டில் உட்கார வைத்தேன் என்றார் முனிவர்.

நம்ம ஆளு ஒருத்தர் ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கிறவர். இந்த கதையைக் கேட்டுவிட்டு என்னிடம் சொன்னார். சேர் எனக்கெ ல்லாம் கையிலே மூங்கில் சிம்பு வைத்து கட்ட வேண்டிய அவசியமெ இல்லை சேர்... ஏன் என்றால் நான் சாதாரணமாக முழங்கையை மடக்க வேண்டிய சந்தர்ப்பமே வருவதில்லை என்றார்.

அது எப்படி என்று கேட்டேன். நான் எப்பவுமே அடுத்தவர்கள் பையிலே இருக்கிற பணத்தைத்தான் எடுக்கிறது வழக்கம் என் றார்.



யாழ். ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டார். (படங்கள்- ஈச்சமோட்டை செய்தியாளர்)

# மிக் விமானக் கொள்வனவு மோசடி

## உதயங்கவின் பிணை கோரிக்கை நிராகரிப்பு

## விசாரணை அதிகாரிகளை மாற்றியது ஏன்?

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு இலங்கைக்கு மிக் 27 ரக போர் விமானங்கள் நான்கினை கொள்வனவு செய்யும் போதும் அதே ரக விமானங்கள் நான்கினை மீள திருத்தும் போதும் இடம் பெற்ற மோசடிகள் குறித்து ஆரம்பம் முதல் விசாரணைகளை முன்னெடுத்த எப்.சி.ஐ.டியின் பிரதான விசாரணை அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரன்சிஸை, விசாரணைப் பொறுப்புக்களில் இருந்து மாற்றியமை தொடர்பில் கோட்டை நீதவான் பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவிடம் கேள்வி எழுப்பினார்.

"கடந்த 2015.03.26 முதல் 2020.01.21 வரை இவ்விவகாரத்தை கையாண்ட பிரதான விசாரணை அதிகாரி நிஹால் பிரன்ஸிஸ், அவரை வழிநடத்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பவித்ர தயாரத்ன ஆகியோரை அப்பொறுப்புக்களில் இருந்து நீக்கப்பட்டமைக்கான காரணம், அவர்களை மீள உள்ளீர்த்து அவர்கள் ஊடாக அது குறித்த விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியுமா? என்ற விடயங்கள் குறித்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும்" எனவும் கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார்.



மிக் 27 ரக போர் விமானங்கள் நான்கினை கொள்வனவு செய்யும் போதும் அதே ரக விமானங்கள் நான்கினை மீளத் திருத்தும் போதும் இடம் பெற்ற பண மோசடிகள் குறித்த விவகாரத்தின் பிரதான சந்தேக நபரான ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்ட நிலையில், அது குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் கோட்டை நீதவான் நீதமன்றில் இடம்பெற்றது.


இதன்போதே கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இவ்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட போது, சிறைச்சாலை அதிகாரிகள் ஊடாக விளக்கமறியலிலுள்ள உதயங்க வீரதுங்க மன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா மன்றில் பிரசன்னமானார்.

தற்போது இந்த விவகார விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டி.சார்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் விஜித்த பெரேரா, பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர் சந்திமா அரும பெரும, பொலிஸ் பரிசோதகர் சஞ்ஜீவ ஆகியோர் மன்றில் ஆஜராகினர். அவர்களுடன் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் துஷித் முதலிகே மற்றும் சிரேஷ்ட அரச சட்டவாதி உதார கருணாதிலக ஆகியோரும் ஆஜராகினர்.

அத்துடன் இதன்போது உதயங்க வீரதுங்கவின் பிணைக் கோரிக்கையை நிராகரித்த நீதவான் வழக்கை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாகவும் உத்தரவிட்டார். (இ-7)

# தொழில் வாய்ப்பை இழந்தவர்களும் அங்கவீனமடைந்த இராணுவத்தினரும் ஜனாதிபதி செயலகம் முன் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இருவேறுபட்ட குழுவினர் தனித்தனியாக கோரிக்கைகளை முன்வைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் வாய்ப்பை இழந்த அதிகாரிகளும் இராணுவ வீரர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தினருமே இருவேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் வாய்ப்பை இழந்த அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதுடன், தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.

இதன்போது ஜனாதிபதி செயலக வளாகத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். இருப்பினும் அவர்களில் சிலருக்கு ஜனாதிபதி செயலகத்தினுள் சென்று கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இதேவேளை அங்கவீனமடைந்த இராணுவ வீரர்களுக்கு ஓய்வூதியத்திற்கு பின்னராக சம்பளத்திற்கு நிகரான தொகையை வழங்குமாறு கோரி இராணுவ வீரர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கமும் ஓய்வுபெற்ற விசேட தேவையுடைய இராணுவத்தினர் மற்றும் அவர்களுடைய மனைவிமார்களுடைய சங்கத்தினரும் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அங்கவீனமடைந்த இராணுவ வீரர்கள் கலந்து கொண்டதுடன் தேசியக் கொடியை ஏந்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது அவர்களில் சிலருக்கு ஜனாதிபதி. செயலகத்தினுள் சென்று கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெகுஜன ஊடகவியலாளர்களுக்கு சலுகை வழங்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

வெகுஜன ஊடகவியலாளர்களுக்கு சலுகை வழங்குவதற்கு தகவல் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதற்கமைய நாடு முழுவதிலிருந்தும் அனைத்து வெகுஜன ஊடகவியலாளர்களின் தகவல்களையும் சேகரிக்க அந்த அமைச்சு திட்டமிட்டுள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்ளைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்படும் வெகுஜன ஊடகக் கொள்கையின்படி இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக கடந்த ஆண்டு அல்லது இவ்வாண்டு அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடகவியலாளர் அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்ட வெகுஜன ஊடகவியலாளர்களிடம் இருந்து மாத்திரம் தகவல்கள் திரட்டப்படவுள்ளன. அதற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தகவல் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் www.media.gov.lk இணையத்தளம் ஊடாக பதிவிறக்கம் செய்துகொள்ள அல்லது அமைச்சுக்கு வருகை தருவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பூர்த்தி செய்த படிவத்தை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் 'பணிப்பாளர் (ஊடகம்), தகவல் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, இல. 163, 'எதிசிதி மெதுர', கிருலப்பனை வீதி, பொல் ஹேன்கொட, கொழும்பு-05' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக 011 251 3645 என்ற இலக்கத்துக்கு அழைப்பினை மேற்கொண்டு மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள முடியும் என்று அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

## முதலைகள் நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காடு பூதவராயர் குளத்துக்குள் (செங்குந்த குளம்) முதலைகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் வசிப்பவர்கள் மற்றும் பயணிப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நல்லூர் பிரதேச சபையினாலும் எச்சரிக்கை பதாகை ஒன்று வைக்கப்பட்டது. இதேவேளை கமநல சேவைகள் திணைக்களத்துக்கு இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் தெ.கிரிதரன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (இ-114)



குருநகர் சிறுத்தீவுப் பகுதியிலுள்ள தூய லூர்து அன்னையின் திருவிழா திருப்பலி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து திருச் சுரூப ஆசீரும் இடம் பெற்றது. (படங்கள்-குருநகர் செய்தியாளர்)

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2020-13.03.2020



விகாரி வருட மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசி நாதன் குருபகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு செவ்வாய், சனி, கேது ஆகிய மூன்று கிரங்களும் இணைந்திருக்கின்றன. இலாபாதிபதி புதன் உச்சம் பெற்றிருக்கிறார். 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சூரியனும், புதனும் ஒன்றாக இணைந்து தர்ம கர்மாதி பதியோகத்தோடு 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றனர். இதனால் புத ஆதித்ய யோகம் செயல்படுகிறது.

ஜென்ம சனியாக இருந்தாலும் மற்ற கிரகங்கள் உங்களுக்கு சாதகமான நிலையில் சஞ்சரிப்பதால் உண்மையிலேயே உங்களுக்கு உயர்வுகள் வரும் மாதமாக இந்த மாதம் அமையப் போகிறது. தடைக் கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். இடமாற்றம், ஊர் மாற்றங்கள் இயல்பாக நடைபெறும். இதுவரை ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும். நீண்டதூர பயணங்களில் சில மாற்றங்களை செய்வீர்கள்.

குரு மங்கள யோகம் இருப்பதால் பிள்ளைகளால் வந்த பிரச்சினை அகலும். பிறர் போற்றும் அளவிற்கு வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். ஆரோக்கியம் சீராகும். சுப விரயங்கள் அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் கைகூடலாம். காவல்துறையால் வந்த கலக்கங்கள் அகலும். முன்னோர் செய்த புண்ணிய காரியங்களை முறையாக செய்ய வேண்டுமென்று விரும்புவீர்கள்.

மூன்றாம் இடத்தில் புதன், சூரியன் சேர்க்கை இருப்பதால் மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். 'பாடுபட்டும் பலன் இல்லையே' என்று நினைத்தவர்களுக்கு, அந்த நிலைமை மாறி ஆதாயம் வரப்போகிறது. இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்பட்டு புதிய பாதை புலப்படும். பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். குழந்தையின்மை கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சி களில் வெற்றி கிடைக்கும். படித்து முடித்து பணி கிடைக்காமல் சுற்றிய பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும்.

இம்மாதம் சிவராத்திரி விழா வருகிறது. அன்றைய தினம் சிவனை வழிபடுவதன் மூலம் சிறப்பான பலன்கள் கிடைக்கும்.

வக்கிர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், இம்மாதம் 21ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் இப்பொழுது 2ஆம் இடத்திற்கு வருகிறார். இந்த கால கட்டத்தில் நல்ல பலன்கள் நடைபெறும். 2ஆம் இடம் தன ஸ்தானம் என்பதால் பொருளாதார பிரச்சினைகள் அகலும். புதிய வாய்ப்புகள் தானாக

## தடைக்கற்கள் படிக்கற்களாக மாறும்

வந்து சேரும். தொழில் ஸ்தானாதிபதியாகவும் புதன் விளங்குவதால் புதிய தொழில் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள், விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு சுய தொழில் தொடங்கலாமா? என்று யோசிப்பீர்கள்.

'உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கவில்லையே' என்று கவலைப் பட்டவர்களுக்கு, இப்

பொழுது உன்னதமான நேரம் இது. ஜென்ம சனி ஒருபுறம் இருந்தாலும் கோட்சார பலன் நன்றாக இருப்பதால் தடைகள் தானாக விலகும். இடையில் வந்த தகராறுகள் சரியாகும். சமூக பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். குறிப்பாக என்றைக்கோ நீங்கள் கொடுத்த தொகை இப்பொழுது வசூலாகி மகிழ்ச்சி தரப் போகிறது.

மேஷ சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், மார்ச் 2ஆம் திகதி பஞ்சம ஸ்தானத்திற்கு வருகிறார்.




இக்காலத்தில் வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெண் பிள்ளைகளின் சுபசடங்குகள் நடைபெற்று மகிழ்ச்சி தரும். புத்திக் கூர்மையோடு செயல்பட்டு புதிய பாதையை அமைத்துக் கொள்வீர்கள். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சுக்ரன் வரும் பொழுது, பூர்வீகச் சொத்து தகராறுகள் அகலும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும்.

கும்ப புதன் சஞ்சாரம்

மார்ச் 12ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு 9இற்கு அதிபதியான சூரியனோடு இணைந்து செயல்பட போகிறார். இதனால் புத ஆதித்ய யோகம் உருவாகிறது. இந்த காலகட்டத்தில் அரசு வழியில் நன்மைகள் உண்டு. பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் தேடிவரும். இதுவரை உழைத்த உழைப்பிற்கு இப்பொழுது பலன் கிடைக்கப் போகிறது. சகோதர வர்க்கத்தினருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கலாம். அதன் மூலம் உதிரி வருமானங்கள் வந்து சேரும். விலகி சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருபகவானை வழிபடுவதோடு, சிவராத்திரி நாளில் 3ஆம் கால பூஜையில் பங்கேற்று சிவனை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் தேவையற்ற மன சஞ்சலங்கள் உருவாகும். விரயங்கள் அதிகரிக்கும். உறவினர் பகையால் உள்ளத்தில் வாட்டம் ஏற்படும். பணப்பற்றாக்குறையின் காரணமாக அருகில் இருப்பவர்களின் ஆதரவை தேடி செல்லும் சூழ்நிலை உருவாகலாம். சங்கிலி தொடர் போல கடன் சுமை கூடலாம். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்வதே நல்லது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். தாய் மற்றும் உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு திருப்தி அளித்தாலும், அடிக்கடி பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும். மாதத்தின் மையப்பகுதியில் இல்லத்தில் சுப காரிய பேச்சுக்கள் முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்படும். பிறருக்கு பணப் பொறுப்பு சொல்வதால் சிக்கல் வரக்கூடும். பணிபுரியும் பெண்களுக்கு மிகுந்த கவனம் தேவை. சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறையலாம். நடராஜர் வழிபாடும், சிவன் வழிபாடும் நன்மையைத் தரும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் இருக்கிறார். இலாபாதிபதி செவ்வாயும் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமாதிபதி சூரியன், 6, 9இக்கு அதி பதியான புதனோடு சேர்ந்து தன ஸ்தானத்தில் உலாவுகிறார். எனவே, எவ்வளவு வருமானம் வந்தாலும் அதைக் காட்டிலும் கூடுதலாகவே செலவு ஏற்படும்.

'விரயங்கள் கட்டுபாட்டுக்குள் அடங்கவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். எதிரிகளின் பலம் கூடும். நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைக்க விரும்புவீர்கள். கண், காது சம்பந்தப்பட்ட நோய்கள் உருவாகி கவலையை அதிகரிக்க வைக்கும். உத்தியோத்தில் உள்ளவர்கள் இரவு பகலாக உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைக்காது. பாம்பு கிரகமான கேது, உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்திலும் ராகுபகவான் 6ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார். எனவே, சர்ப்ப தோஷத்தின் பின்னணியிலும் உங்கள் இராசி அமைந்திருக்கிறது. எனவே இனம்புரியாத கவலை மேலோங்கும். இல்லத்தில் உள்ளவர்களோடு சண்டை, சச்சரவுகள் வந்து கொண்டே இருக்கும்

'கவனத்தோடு நீங்கள் செயல்பட்டாலும் அதையும் மீறி இப்படி நடக்கிறதே' என்று கவலைப்படுவீர்கள்.

பயணங்களரல் பிரச்சினைகள் அதிகரிக்கும். உத்தியோக ரீதியாக கடல் தாண்டி செல்லும் முயற்சி தாமதமாகலாம். வாகனங்களால் தொல்லைகள் ஏற்படும். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்க இது நல்ல நேரம் ஆகும். வாகன மாற்றம், வீடு மாற்றம், இடமாற்றங்கள், பணியாளர் மாற்றங்கள் போன்றவை, அடுத்தடுத்து நடைபெறக்கூடிய காலகட்டம் இது. விரயங்களை சுபவிரயங்களாக மாற்றிக்கொள்வது உங்கள் புத்திசாலித் தனமாகும். மாதக்கடைசியில் கும்ப புதனின் சஞ்சார காலத்தில் எதிர்பார்த்த பலன்கள் நடைபெறும். அதுவரை வாழ்வில் ஏற்படும் குறுக்கீடு சக்திகள் அகல வழிபாடுகள் உங்களுக்குக் கைகொடுக்கும். இந்த மாதம் விரயச் சனியால் விபரீதங்கள் ஏற்படாமல் இருக்க, சனிக்கிழமை தோறும் அனுமனையும், சிவராத்திரி அன்று நான்காம் ஜாமத்தில் சிவன் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

வக்கிர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் இம்

## குடும்பச்சுமை கூடும் நேரம்

மாதம் 21ஆம் திகதி உங்கள் இராசிக்கு வருகிறார். இந்தநேரத்தில் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். உடல் வலிமையும் மனவலிமையும் ஒருங்கே அமையும். திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள். எதிரிகள் விலகிச்செல்வர். காவல்துறை மற்றும் நீதித்துறையால் ஏற்பட்ட கலக்கங்கள் அகலும். கோபம் காரணமாக உடன் இருக்கும் நண்பர்களோடு ஏற்பட்ட பகை மாறும். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வெற்றி கிடைக்கும். நீடித்த நோய் அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். கொடுத்த வாக்கை காப்பாற்ற சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். நீங்கள் கேட்ட பங்கு உங்களுக்குக் கிடைக்கும். இந்த வக்ர புதனின் ஆதிக்க காலம் வளர்ச்சியையே அதிகரிக்கும்.

மேஷ சுக்கிரன் சஞ்சாரம்

மேஷ இராசிக்கு மார்ச் 2ஆம் திகதி சுக்கிரன் வருகிறார். இக்காலம் ஒரு இனிமையான காலம்தான். 5, 10 ஆகிய இடங்களுக்கு




அதிபதியானவர் சுக்கிரன். புத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன், 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது நன்மைகள் அதிகம் நடைபெறும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். படித்து முடித்து வேலை கிடைக்காமல் இருந்த பிள்ளைகளுக்கு, உத்தியோக முயற்சி செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரணம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

கும்ப புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு எதிர்ப்பு வியாதி, கடன் எனப்படும் விபரங்களை அறிந்து கொள்ள உதவும் இடமான 6ஆம் இடத்திற்கும், பிதுர்ராஜிய ஸ்தானம் எனப்படும் 9ஆம் இடத்திற்கும் அதிபதியான புதன், மார்ச் 12ஆம் திகதி உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான தனஸ்தானத்திற்கு வருகீறார். எனவே எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறும். எதிரிகள் உங்கள் சொல்லுக்கு கட்டுப்படுவர். இதுவரை பாசம் காட்டாத பெற்றோர்கள் உங்கள் மீது பாசம் காட்டுவர். நேசத்தால் உங்களுடைய நிகழ்கால தேவைகளை பூர்த்தி செய்வர். வியாபாரம் சூடு பிடிக்கும். வீண்பழிகள் அகலும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஜெய் ஆஞ்சநேயரை வழிபடுவதோடு, சிவராத்திரி அன்று சிவ பூஜையை கண்டுகளித்தால் கவலைகளில் இருந்து விடுபடலாம்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடுவது மட்டுமல்லாமல் உடன்பிறப்புகள் வழியிலும், உடன் இருப்பவர்கள் வழியிலும் எதிர்பாராத விரயங்கள் உண்டாகும். வாக்கு ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், கோபத்தால் வாய்ப்புகள் கைநழுவி செல்லலாம். எனவே நிதானம் தேவை. கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட, விட்டுக் கொடுத்து செல்லுங்கள். தாய் மற்றும் சகோதரத்தால் உதவிகள் கிடைக்கும். இருப்பினும் பூசல்களும் மனஸ்தாபங்களும் இடையிடையே வந்து கொண்டே இருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். அவர்களின் வேலைவாய்ப்புகளும் சிறப்பாக அமையும். பழைய ஆபரணங்களை கொடுத்துவிட்டு புதிய ஆபரணங்கள் வாங்குவீர்கள். வரவும் செலவும் சமமாகும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைப்பது அரிது. வேலைபளு கூடும். தடைகள் அகல சனிக்கிழமை தோறும் விஷ்ணு, லட்சுமி வழிபாடும், சிவராத்திரி அன்று சிவன் வழிபாடும் செய்யுங்கள்.

(தொடரும்)

# "அழிவைத் தடுப்போம்; தலைமுறையைப் பாதுகாப்போம்"

# போதைப்பொருளுக்கு எதிராக கையெழுத்து வேட்டை!

(ஏறாவூர்)

**போதைப்பொருளால் ஏற்படும் அழிவைத் தடுப்போம்; இளம் தலைமுறையைப் பாதுகாப்போம் என்னும் தலைப்பிலான போதைப்பொருளுக்கு எதிராக கையெழுத்துப் பெறும் போராட்டம் நேற்றுக்காலை மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.**








போதைப்பொருளை இலங்கையில் இருந்து முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியைக் கோரும் வகையில் 50ஆயிரம் கையெழுத்துக்களைப் பெறும் போராட்டத்தை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், தேசிய மீனவ பெண்கள் சமூகம், மட்டக்களப்பு மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் என்பன இணைந்து மேற்கொண்டிருந்தன.

எதிர்வரும் மார்ச் எட்டாம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச மகளிர் தினத்தன்று ஜனாதிபதியிடம் இந்தக் கையெழுத்துக்களை கையளிக்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க தேசிய அமைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், திட்ட இணைப்பாளர் லவீனா உட்பட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்கள், தேசிய மீனவ பெண்கள் சமூக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இலங்கையின் 15 மாவட்டங்களில் இந்தக் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அவ்வாறு கையெழுத்துப்பெறும் மனுவை ஜனாதிபதியிடம் சர்வதேச மகளிர் தினத்தன்று கையளிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க தேசிய அமைப்பாளர் ஜேசுதாசன் தெரிவித்தார்.

இருக்கும் சட்டத்தை பயன்படுத்தி போதைப்பொருளால் ஏற்படும் அழிவுக்கு சிறந்த தீர்வை வழங்கவேண்டும் அவ்வாறு இல்லாவிட்டால் மக்களின் ஆலோசனைகளைப் பெற்று புதிய சட்டத்தினை உருவாக்கி போதைப்பொருளில் இருந்து இந்நாட்டினை பாதுகாக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டு நிற்கின்றோம் என்றார்.

இந்த நாட்டில்போதைப்பொருள் பாவனையால் இளம் சமுதாயம் அழிந்துசெல்வதுடன் குடும்பங்கள் மத்தியிலும் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதாகவும் அவற்றைத் தடுக்க ஜனாதிபதி நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலித்தீன், பிளாஸ்ரிக் அற்ற நகராக சாவகச்சேரியை மாற்றுவதே நோக்கம்

## தவிசாளர் திட்டவட்டம்



(சாவகச்சேரி)

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அற்ற நகராக சாவகச்சேரி நகரை மாற்றியமைப்பதே எமது நோக்கம் என சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற பொலித்தீன், பிள்ாஸ்ரிக் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக சாவகச்சேரி நகரசபை மற்றும் கோர் நிறுவனம் ஆகியன இணைந்து கடந்த ஒன்றரை வருடங்களாக செயலாற்றி வந்தன. அதன் போது வட்டாரம் வட்டாரமாகச் சென்று விழிப்புணர்வு நடத்தப்பட்டது. அதன் முன்மாதிரியாக சாவகச்சேரி நகரசபை தமது பொன்விழா மண்டபத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளில் லஞ்சீற் பாவனையை முற்றாகத் தடை செய்தது.

அதேபோல் பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்கள் மற்றும் ஐஸ்கிறீம் கப் முதலான பிளாஸ்ரிக் பொருட்களையும் தடை செய்தது. இருப்பினும் ஒரு சிலர் நிகழ்வுகளுக்கான முன்பதிவு செய்யும் போது பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல் தான் வேண்டும் என கோருகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் சில விட்டுக்கொடுப்புக்களை செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் பொலித்தீன் பைகளுக்கு மாற்றீடாக துணிப் பைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இதனூடாக பெரும்பாலான மக்கள் பொலித்தீன் பாவனையைத் தவிர்த்து வருகின்றனர். அத்துடன் எமது விழிப்புணர்வின் ஊடாக பாடசாலை மாணவர்களின் தண்ணீர் போத்தல்கள் மற்றும் சாப்பாட்டுப்பெட்டி மாற்றப்பட்டுள்ளன. அத்துடன் நகர சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களிலும் லஞ்சீற் பாவனை நிறுத்தப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று வருடங்கள் உலக வங்கி கழிவு முகாமைத்துவம் தொடர்பாக சாவகச்சேரி நகரசபையுடன் இணைந்து செயலாற்றவுள்ளது.

இதனூடாக மீள் சுழற்சி போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்போம் என அவர் மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

# வீட்டுத் திட்டங்களை விரைவாக வழங்க அதிகாரிகளுக்கு பிரதமர் மகிந்த பணிப்பு

(பத்தரமுல்ல)



கொழும்பு மாவட்டத்தில் இருக்கும் குடிசை குடியிருப்பாளர்களுக்கான வீட்டுத் திட்டங்களை விரைவாக வழங்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார். நகர அபிவிருத்தி, நீர்ப்பாசன மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பத்தரமுல்லயில் இடம் பெற்றது.

இதன்போது கொழும்பு துறைமுக நகரம் மற்றும் கொழும்பை கேந்திரமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் கட்டட நிர்மாணங்கள், வீதி அபிவிருத்தி, புகையிரதப் பாதை, பூங்கா உருவாக்குதல் மற்றும் கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் அடங்கலான நகர அபிவிருத்தி குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது. இதன்போதே பிரதமர் மகிந்த இந்தப் பணிப்புரையை விடுத்தார்

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி கொலன்னாவ பகுதியில் அமைந்துள்ள 240 சன்ஹித செவன வீட்டுத்திட்டமாகும். இந்த திட்டங்கள் மார்ச் மாதத்திற்கு முன்னர் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களிடம் ஒப்படைக்கப்படும் என வீடமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்தது.

மேலும் இதுபோன்ற பகுதிகளில் வசிப்பவர்கள் அடிப்படை உள்கட்டமைப்பு இல்லாமல் வறுமையில் வாழ்பவர்கள் என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியது.

அத்தோடு அவர்களுக்கு நிலத்திற்கான உரிமைப் பாத்திரங்கள் இல்லாதமையால் பாடசாலை அனுமதியைப் பெற முடியவில்லை என்றும் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ள தடை காணப்படுவதாகவும் அமைச்சு தெரிவித்தது.

எனவே இந்த வீட்டுத் திட்டங்கள் மூலம் வீட்டுப் பிரச்சினைகள் அம்மக்களுக்கு தீர்க்கப்படும் என்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு மேலும் நம்பிக்கை வெளியிட்டது. (இ-7)

# தலைமைத்துவம் செய்யும் தவறால் அனைத்தும் தவறாகவே முடிகிறது!

## முன்னணி உறுப்பினர் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் தலைமைத்துவம் செய்யும் தவறுகளால்தான் அனைத்தும் தவறாகவே முடிகின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் நிதிகேசன் குற்றம் சாட்டினார். சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சேவை செய்வதற்கு சபை உறுப்பினர்கள் ஆர்வத்துடன் இருக்கின்றனர். ஆனால் அதிகாரிகளும் தலைமைகளும் செய்யும் தவறுகளால் சபை குழம்பும் அதேவேளையில் உறுப்பினர்களுக்கும் சபை விடயங்களில் ஆர்வம் குறைவடைகின்றது. சபையில் ஓர் விடயம் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த செயலாளர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாரத்தில் மூன்று தடவைகள் சாவகச்சேரி மீன் சந்தையில் கடலுணவுகளின் தரம் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தோம். ஆனால் குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை.

கடலுணவுகளில் போமலின் இரசாயனம் கலக்கப்படுவதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முறைப்பாடு சென்றும் நகரசபை அசண்டையீனமாக இருக்கிறது. நோய்களுக்கான அடிப்படை சுகாதார மற்ற உணவுகள் தான்.

எனவே உணவுப் பொருட்களின் தரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்ப டுவது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# உலக சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சி; அரசு ஏன் விலையைக் குறைக்கவில்லை?

## நாடாளுமன்றில் சஜித் கேள்வி

(கொழும்பு)

**உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைந்துள்ள நிலையில் இன்றுவரை எரிபொருளின் விலையை அரசாங்கம் குறைக்காதமைக்கான காரணம் என்ன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.**

சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இந்தத் கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த ஆட்சியில் உலக சந்தையில் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்பட்டாலும் மக்களுக்கு நியாயமான முறையில் எரிபொருள் வழங்கப்பட்டது. ஆனால் இவர்கள் ஆட்சிக்கு வந்து தற்போதுவரை எவ்வித மான மாற்றத்தையும் கொண்டு வரவில்லை.

அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார், உலக சந்தையில் சடுதியாக கூடினால் எரிபொருள் விலை உள்ளூரில் மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்படும் என்று. ஆனால் தற்போது உலக சந்தையில் விலை குறைவடைந்துள்ளது.

இருப்பினும் இதுவரை எரிபொருள் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறிப்பாக கடந்த செப்டெம்பர் 62.72 அமெரிக்க டொலராக இருந்த மசகு எண்ணெயின் விலை தற்போது 56 டொலராக குறைவடைந்துள்ளது.



மேலும் சிங்கப்பூரிலும் மசகு எண்ணெயின் விலை குறைவடைந்துள்ளது. ஆனால் இவர்கள் எரிபொருள் விலையில் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை.

இது பொருளாரதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கத்திற்கு திறன் இன்மையினை காட்டுகின்றது. மேலும் இவர்களின் இந்த நடவடிக்கையால் மக்கள் மேலும் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கம் தேர்தல் காலப்பகுதியில் எரிபொருள் விலையைக் குறைத்து நன்மையைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதை எம்மால் காண முடிகின்றது" என சஜித் மேலும் குற்றம் சாட்டினார். (இ-7)



தமிழர் திருநாள் தைப்பொங்கலை சிறப்பிக்கும் வகையில் மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தால் கலை, விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் மயிலிட்டி திருப்பூர் கடற்கரை சூழலில் இடம் பெற்றது.

## 50 கிலோ மீற்றர் வீதி யாழில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக 50 கிலோ மீற்றர் புனரமைக்கும் திட்டம் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளைப் புனரமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந் நிலையில் முதற்கட்டமாக நாட்டில் 5 ஆயிரம் கிலோமீற்றர் வீதியைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 50 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1981

### யாதவன்



ஒரு முறை விழுந்து பார்
எழும்போது உலகம்
உனக்கு
புதிதாய் தெரியும்
ஒரு முறை தோற்றுப் பார்
வெல்லும் போது
உலகம்
உன்னை புதிதாய் பார்க்கும்

### வதனி

ஏன்டா எல்லாப் பாடத்திலேயும் சைவர் வாங்கியிருக்கே?



அப்பா அது சைவர் இல்லேப்பா என் மார்க்கை எல்லாம் பார்த்து டீச்சர் ஓ போட்டிருக்காங்க!

### கல்யாணி

மனதையும் உடலையும் விறுவிறுப்பாக வைத்திருக்க உதவுவது- விளையாட்டு



### தாருசன்

ஆமா.. என்னோட அம்மாவ ரொம்ப நேரமா காணல... கண்டுபிடிச்சா சொல்லுங்க...



### கனிமொழி



உன்னோட
அம்மாவையும்
காணல...
என்னோட
அம்மாவையும்
காணல...
என்னம்மா
இப்பிடி
பண்றீங்களே
ம்மா...

### யோகேஸ்



என்னையும் என்னோட அம்மா... இப்பிடித் தான் தொல்ல பண்றவங்க...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் அதிபர் சி. நல்லகுமார் தலைமையில் இடம்பெற்றது. இதில் விநோத உடைப் போட்டியில் சிறார்கள் பல்வேறு வேடமணிந்து அசத்தினர். இதன்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கெதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இரு சிறார்கள் வேடமணிந்து வந்தமை பலரது கவனத்தையும் ஈர்த்தது. (படங்கள்:- செ .ரவிசாந்)

# பயங்கரவாதத்தை ஒழிக்க மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்



(ஏறாவூர்)

எதிர்வரும் காலங்களிலும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட கட்டளை அதிகாரி லெப்டினன் லசந்த ஜெயசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஜாமியுஸ் ஸலாம் ஜூம்ஆ பள்ளிவாசலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இராணுவத்தினர், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் சாதி, சமயம், இனம், மொழி பார்த்து தமது கடமைகளை செய்வதில்லை.

மேலும் இன்று நமக்கிருக்கின்ற பெரிய சவால் போதைப் பொருளை ஒழிப்பதாகும். அத்துடன் இளம்சந்ததியினரை போதைப் பொருள் பாவனையிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

இதனால் அனைவரும் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மாலை நேர கற்றல் நிலையம் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தின் 4ஆவது ஆண்டு நிறைவு விழாவும், அதனையொட்டிய மாலை நேர கற்றல் நிலைய ஆரம்ப நிகழ்வும் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கோட்டை கிராமத்தில் இடம்பெற்றது. ஒற்றுமையான கல்விச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் கழகத்தினரால் சிறுவர்களுக்கான மாலைநேர கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட் டன.

அதன் ஓர் அங்கமாக மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி என்பன நடத்தப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.லயன்ஸ் கழக உறுப்பினர் கலாநிதி திருச்செல்வன், ஜே/81 கோட்டை கிராம உத்தியோகத்தர் ரமண பிரகாஸ், திருநகர் கிராம உத்தியோகத்தர் றுகுனதாஸ் மற்றும் இளைஞர் கழகத் தலைவர் அன்ரனி சந்தோஷ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (இ-18)

# வீதி விபத்தில் சிக்கிய மூவர் உயிரிழப்பு!

(கொழும்பு)

கட்டுப்பொத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுபொத்த வீதியில் ஹொறன்முன்ன சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை வான் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் காயமடைந்த வான் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி ஆகியோர் கட்டுப்பொத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட னர்.

இதில் மோட்டார் சைக்கிள் சாரதி மேலதிக சிக்சைக்காக குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மரணித்தவர் 40 வயதுடைய எல்லை வீதி, மொறஹொல்லாகம, நாஹெல்லாகமையைச் சேர்ந்தவராவார். மேலதிக விசாரணைகளை கட்டுப்பொத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வென்னப்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தோப்புவை தங்கொட்டுவை வீதியில் தம்பரவிலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் தங்கொட்டுவை நோக்கிப் பயணித்த லொறி வீதியைக் கடந்து சென்ற பெண் ஒருவரை மோதியது.

இந்த விபத்தில் காயமடைந்த பெண் தங்கொட்டுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மரணித்தவர் 59 வயதுடைய தம்பரவிலை வைக்காலையைச் சேர்ந்தவராவார். விபத்து தொடர்பாக லொறியின் சாரதி கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

பல்லம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பங்கதெனிய ஆனமடுவை வீதியின் 52 ஆவது சந்தியில் நேற்று முன்தினம் மாலை 6.50 மணியளவில் ஆனமடுவை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளை திருப்ப முற்பட்ட போது எதிரே பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த இரு மோட்டார் சைக்கிளின் சாரதிகளும் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்தார்.

மரணித்தவர் 73 வயது டைய பொத்துக்கம, பல்லம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். மேலதிக விசாரணைகளை பல்லம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## சிவராத்திரி விழாவும் ஆண்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழக 65 ஆவது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் நாளை மறுதினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறும். (இ-5)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை ஆலய முன்றலில் அதிபர் திருமதி குமுதினி அசோக்குமார் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜெ. உதயகுமார், சிறப்பு விருந்தினராக கோப்பாய் மரியன்னை தேவாலய பங்குத் தந்தை அருட் கலாநிதி அன்ரன் மத்தாயஸ், கோப்பாய் சங்கம நிறுவனத்தின் இயக்குநர் அருட் தந்தை வி. விஜயகுமார் (அ.ம.தி) ஆகியோர் கல ந்து கொள்வர். (இ-5)

## யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

(திருக்கோவில்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மொறானவட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த நபரை காட்டு யானை தாக்கியதில் அவர் மரணித்துள்ளதாக திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி விசாரணைகள் மேற்கொள்ளப்பட் டன.

மரணித்தவர் 65 வயதுடைய முதலாம் ஒழுங்கை,நுகுராணி பள்ளி வீதி, அக்கரைப்பற்றைச் சேர்ந்தவராவார்.

மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## மாடியிலிருந்து விழுந்த பெண் உயிரிழப்பு

(வெள்ளவத்தை)

வெள்ளவத்தைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹெவிலொக் சிற்றி வீட்டுக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.15 மணியளவில் 19 ஆவது மாடியில் இருந்து பெண் ஒருவர் கீழே விழுந்து மரணித்துள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 130 | 130 | 200 |
| தக்காளி | 200 | 240 | 190 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 90 | 120 |
| கோவா | 140 | 260 | 110 | 140 |
| கரட் | 200 | 280 | 260 | 240 |
| பூசணி | 100 | 140 | 150 | 160 |
| புடோல் | 140 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 380 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200-220 | 260 | 240 |
| பாகற்காய் | 140 | 140 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 160 | 140 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 130 | 130 | 160 |
| லீக்ஸ் | 200 | 280 | 340 | 240 |
| பீற்றூட் | 100 | 160 | 160 | 160 |
| கறிமிளகாய் | 200 | 220 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 450 | 400 |
| போஞ்சி | 120 | 200 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | - | 140 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 50 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 40-60 | 55 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 160 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 160 | 180 | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | - | 110 | 100 |

## விடுகதைகளும் விடைகளும்

• கடிவாளம் போட்டால் காலிலே கிடக்கும்.

**செருப்பு**

• படுத்துத் தூங்கினால் கண்முன் ஆடும். அடுத்து விழித்தால் மறைந்தே ஓடும் அது என்ன?

**கனவு**

• எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அது என்ன?

**நண்டு**

• ஒல்லியான மனிதன். ஒரே காது மனிதன். அவன் காது போனால் ஏது பயன்?

**ஊசி**

• நீரிலே கொண்டாட்டம் நிலத்திலே திண்டாட்டம்.

**மீன்**

• சின்னஞ் சிறு வீட்டில் சிப்பாய்கள் பலபேர்.

**தீக்குச்சி**

• கோயிலைச் சுற்றிக் கறுப்பு. கோயிலுக்குள்ளே வெளுப்பு.

**சோற்றுப் பானை**

• பச்சைக் கதவு. வெள்ளை ஜன்னல். கறுப்பு ராஜா.

**சீத்தாப்பழம்**

• நடக்க முடியாது ஆனால் நகராமல் இருக்காது. அது என்ன?

**கடிகாரம்**

• முதுகை அமுக்கினால் மூச்சுவிடுவான் பல்லை அழுத்தினால் பாட்டுப் பாடுவான்.

**ஆர்மோனியம்**

• அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி. பாதி நாள் குறைவாள். பாதி நாள் வளர்வாள்.

**நிலா**

• "ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது" அவர்கள் யார்?

**எறும்புக் கூட்டம்**

• மொட்டைப் பாட்டிக்கு. முழுகத் தெரியாது.

**வெண்ணெய்**


• ஐந்து அடுக்கு நாலு இடுக்கு.

**விரல்கள்**

• கிணற்றைச் சுற்றிப் புல்.

**கண் புருவம்**

## வழிகாட்டுங்கள்





# சிறுவர் அரங்கம்

# வாஜனின் சபதம்!



வாஜன், ஒரு பறவை வேட்டைக்காரன். ஏழை என்றாலும் அவன் ஆசை பெரியது. இந்தோனேஷிய மன்னர் இஷாக்கின் அழகான மகளை மணக்க விரும்பினான். மன்னர் இஷாக் திறமையான வில்வித்தைக்காரர். இளவரசியை தலைசிறந்த வில்வித்தைக்காரனுக்கே மணமுடித்துத் தரப்போவதாக அறிவித்தார். வாஜனுக்கோ வில்வித்தையைப் பற்றி எதுவுமே தெரியாது. ஆனால், அவன் ஒரு திட்டம் தீட்டினான். பறவைகள் சிலவற்றைப் பிடித்த வாஜன், அவற்றின்வலது கண்ணை மட்டும் தோண்டி எடுத்தான். பிறகு அரண்மனைக் கதவுகள் அருகே நின்று அவற்றை விற்கத் துவங்கினான். அவனைச் சுற்றி கூட்டம் கூடியது. அரசர் விசாரிக்கச் சொன்னார்.


வேலையாள், வாஜன் என்பவன் ஒரே ஒரு கண் மட்டுமுள்ள பறவைகளை விற்பதாகத் தெரிவித்தான். அரசர் வாஜனை அழைத்து வரச் சொன்னார். எப்படி உன் பறவைகளுக்கு ஒரே ஒரு கண் மட்டும் உள்ளது? என்றார். வாஜன், அரசே, நான் எப்போதுமே பறவைகளை வலது கண்ணில் மட்டுமே அம்பெய்து கொல்வேன் என்று பதிலளித்தான். வியந்து போன அரசர், வாஜனுக்கே தன் மகளை மணமுடிக்க முடிவு செய்தார். வாஜன், தான் ஏழை என்றும் ராஜாவின் மகளை வைத்துக் காப்பாற்ற வசதியில்லை என்றும் கூறினான். அவனது நேர்மையைப் பாராட்டிய அரசர், வாஜன் தன் அரண்மனையிலேயே வசிக்கலாமென்றும் கூறினார். இளவரசிக்கும் வாஜனைப் பிடித்துப்போனது. சில வாரங்கள் கழித்து இருவருக்கும் திருமணம் நடந்தது. பெரிய வில்வித்தைக்காரன் தனக்கு மருமகனாகக் கிடைத்திருக்கிறான் என்ற பெருமையோடு, வாஜனை திருமண விழாவில் திரண்டிருந்த மக்கள் முன் அவன் திறமையை நிரூபித்துக் காட்டச் சொன்னார் அரசர். அரசர் தன் வில் அம்புகளை எடுத்துக் கொடுத்தார்.

வாஜன் பயத்தில் நடுங்கினான். வில், அம்புகளை எப்படிப் பிடிப்பது என்றுகூட அவனுக்குத் தெரியாது. வில்லையும் அம்பையும் கையில் பிடித்துக்கொண்டு வெகுநேரம் சும்மா நின்றான். விருந்தினர்கள் பொறுமையிழந்தனர்.

சிலர் வாஜனை ஏமாற்றுக்காரன் என்று சந்தேகிக்கத் தொடங்கினர். பொறுமையிழந்த விருந்தினர் ஒருவர், சீக்கிரம் அம்பெய்யச் சொல்லி வாஜன் முதுகில் தட்டினார்.

அப்போது அது வாஜனின் கைகள் அசைந்ததால் அம்பு, வில்லில் இருந்து புறப்பட்டு காற்றில் பறந்தது. சரியாக அந்த நேரத்தில் ஒரு கொக்கு பறந்து வந்தது. அம்பு அதனைக் குத்த, கொக்கு கீழே விழுந்து இறந்தது.

அரசர் விரைந்து சென்று இறந்த பறவையைத் தூக்கினார். வாஜனின் அம்பு கொக்கின் மெல்லிய கழுத்தில் குத்தி இருப்பதாகவும் அதன் மூலமே வாஜனின் திறமை தெரிகிறது என்றும் பாராட்டினார். அதனை அனைவரும் ஏற்று வாஜனைப் பாராட்டினார்கள். ஆனால் வாஜனோ கோபமாக இருப்பதுபோல் நடித்தான். அரசே! எப்போதும் நான் பறவைகளின் வலது கண்ணில் மட்டுமே அம்பெய்வேன். ஆனால், விருந்தினர் என் கையைத் தட்டியதால் குறி தவறி பறவையின் கழுத்தில் பட்டது. என் கொள்கையே பாழாகிவிட்டது. இனி நான் வில்லையே தொடமாட்டேன் என்று சபதம் செய்தான். அதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. சில நாட்களில் வாஜன் அரசனானான். வெகு காலத்துக்கு அவனை மிகச் சிறந்த வில்வித்தைக்காரன் என்று மக்கள் பேசிக் கொண்டனர்.



முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன்.
*– நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீதியரசர் விக்னேஸ்வரன் மீது தென்பகுதிக்கு ஏன் இந்தக் கோபம்

தென்பகுதி அரசியல்வாதிகளும் இனவாத உணர்வு கொண்ட சிங்கள மக்களும் நீதியரசர் விக்னேஸ்வரனைக் கடுமையாகச் சாடி வருகின்றனர்.

தமிழ் மக்கள் தொடர்பில் அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் சிங்களத் தரப்புகளுக்கு சர்வதேச மட்டத்தில் மிகப்பெரும் தலையிடியைக் கொடுத்து வருவதே காரணம் என்பது நோக்கர்களின் கருத்து.

இதுதவிர, நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்களின் அரசியல், கட்டமைக்கப்படுமாயின் அவர்களைச் சமாளிக்க முடியாமல் போகும் என்பதும்,

நீதியரசர் விக்னேஸ்வரனின் கருத்துக்களுக்கு இந்தியப் பிரதமர் மோடி தொடக்கம் உலகத் தலைவர்கள் வரை மதிப்பளிப்பர் எனவும் இஃது இலங்கையின் ஆட்சியாளர்களுக்கும் சிங்களத் தரப்புகளுக்கும் அவ்வளவு நல்லதல்ல என்பதுமான கருத்தியல் தென்பகுதியில் உண்டு.

உண்மையில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் இருக்கின்ற இடத்தில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இருந்திருப்பாராயின், வன்னியில் நடந்த போர்க்குற்றத்தில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகியிருக்க முடியாது.

ஏனெனில் யுத்தத்தில் தமிழ் மக்கள் பட்ட அத்தனை அவலங்களையும் எந்தப் பயமும் மறைப்பும் இல்லாமல் நீதியரசர் விக்னேஸ்வரன் வெளிப்படுத்தியிருப்பார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழ் மக்களின் அரசியல் தலைவராக இரா.சம்பந்தர் இருந்தார்.

அவர் இலங்கை ஆட்சியாளர்களுக்கு மிகுந்த நட்பாக இருந்ததுடன் போர்க்குற்ற விசாரணை முடிவடைந்து விட்டது என்பதான செய்தியை தனது கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஊடாகத் தெரியப்படுத்தினார்.

தவிர, இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டுமென ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தை கேட்டுக் கொண்டார்.

இந்தச் செயற்பாடுகள் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்காகச் செய்வது போல இருந்தாலும் அந்த நடவடிக்கைகள் அனைத்தும் மகிந்த ராஜபக்ஷ தரப்புக்குச் சாதகமாகவும் பாதுகாப்பாகவும் அமைந்தன.

இதனால் தமக்குக் கிடைக்க வேண்டிய எதிர்க் கட்சித் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ஷ இரா.சம்பந்தருக்கு நான்கு வருடங்களுக்குக் குறையாமல் விட்டுக் கொடுத்தார்.

உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் மகிந்த ராஜபக்ஷவே எதிர்க் கட்சித் தலைவராக இருந்திருக்க வேண்டும். எனினும் இரா.சம்பந்தர் அந்தப் பதவியில் இருப்பது தமக்குச் சாதகம் என்ற அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ அதனை விட்டுக் கொடுத்தார்.

இது மட்டுமன்றி இப்போதும் இரா.சம்பந்தருக்கான சலுகைகளை மகிந்தவின் அரசு இம்மியும் குறைக்கவில்லை.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு அனைத்து சலுகைகளையும் வசதிகளையும் வழங்கிக் கொண்டு; வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீது தென்பகுதி ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் கடும் கொதிப்பும் கோபாவேசமும் கொண்டிருப்பதற்குள்; விக்னேஸ்வரனின் அரசியல் தலைமையைக் கண்டு அவர்கள் அச்சமடைந்துள்ளனர் என்பதே நிதர்சனமாகும்.

யாழ்.பல்கலையில் பகிடிவதை விவகாரம்

## குற்றவியல் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் இடம் பெற்றதாகக் கருதப்படும் பகிடிவதை தொடர்பில் கொழும்பு குற்றவியல் பொலிஸார் (சி.ஐ.டி) விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் தொழில்நுட்பப்பிரிவு மாணவர்களால் புதுமுக மாணவிகளிடம் பகிடிவதை இடம் பெற்றதாக ஊடகங்கள் வாயிலாகச் செய்திகள் வெளியிடப்பட்டது

இந் நிலையில் யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தால் குறித்த விடயம் தொடர்பில் விசாரணை செய்யக் குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் இடம் பெற்றுவரும் நிலையில் சில மாணவர்களுக்கு தற்காலிக வகுப்புத்தடையும் விதிக்கப்பட்டது

இதன் தொடர்ச்சியாக கிளிநொச்சி வளாகத்தின் பிரதிப் பதிவாளரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பகிடிவதைச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயுமாறு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது

இவ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கிளிநொச்சி நீதவானின் கவனத்துக்குக் கொண்டு சென்ற பொலிஸார் பகிடிவதை தொடர்பில் உரையாடப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் மற்றும் ஊடகக் காணொலிகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஊடாகக் விசாரணைகளை மேற்கொள்ள நீதவான் அனுமதி வழங்கினார்

அந் நிலையில் உயர் கல்வி அமைச்சரினால் கொழும்புக் குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கு வழங்கப்பட்ட பணிப்பின் பேரில் அவர்களும் இணைந்து விசாரணைகள் இடம்பெற்று வருகிறது

ஆகவே குறித்த விசாரணை தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் தங்களால் முன் னெடுக்கப்படக் கூடிய வரையிலான விசாரணைகளை மேற்கொள்வதுடன் மேலதிக தொழில்நுட்ப விசாரணைக்காக நீதிமன்ற உத்தரவைப் பெற்று கொழும்பு குற்றவியல்விசாரணைப் பிரிவுக்கு பாரப்படுத்துவார்கள் என அறியக் கிடைத்தது (ம-3,10)

## தேசிய வாசிப்பு மாத நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சங்கானை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நூலக கேட்போர் கூடத்தில் சங்கானை உப அலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி சித்திரா இராசலிங்கம் தலைமையில் நடைபெறும்..

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி சோ.தேவராசா, கௌரவ விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் கி.விஜயேஸ்வரன், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பொ.யசிதரன், வலி.மேற்கு பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயமாலினி நொபேட் யூலியன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கல்வியமைச்சு நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் மத விடயதானங்களை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-II வகுப்புக்கு இணைத்துக் கொள்வதற்காக 2020-02-24 முதல 2020-03-02 வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்ட நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்று நீங்கள் நினைக்கும் போது ஒன்றை மட்டும் மறவாதீர்கள். நிச்சயம் எதிர்காலம் என்று ஒன்று உண்டு. அதற்கும் இழப்பென்பது இல்லை.**
**-[illegible]**

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் தாக்குதல் தொடர்பில்

இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை குறித்த கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணாக வெளியல் இருந்து வாள்களுடன் நபர்கள் வரவழைக்கப்பட்டு விரிவுரையாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை எனக் கருதப்படும் முல்லைத்தீவைச் சேர்ந்த நபர் ஒருவரும் அதே கல்லூரியில் கல்வி பயிலும மாணவன் ஒருவரையும் யாழ்ப்பாணம் பொலிஸா கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் நீதவான் முன் னிலையில் ஆஜர் படு த்தியபோது இம்மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர்வி டப்பட்டது. (ம-3,10)

## ஜனாதிபதி கோட்டாபய ஜப்பானுக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர் வரும் மே மாதம் 28ஆம் திகதி ஜப்பானுக் கான உத் தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஜப்பானில் இடம் பெறவுள்ள ஆசியாவின் எதிர் காலம் எனும் மாநாட்டில் கலந்து கொள் வதற்காகவே ஜனாதிபதி அங்கு பயணமாகவுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் ஜப்பானின் டோக்கியோ நகரில் இடம்பெறும் 'ஆசியாவின் எதிர் காலம்' மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளவே ஜனாதிபதி கோட்டாப்ய ராஜபக்ஷ ஜப்பானுக்கு விஜயம் செய்யவுள்ளார். (ம-3)

சாய்ந்த மருது பிரதேசசபை

## அடிப்படை உரிமை மனு விசாரணை நிறைவு

(கொழும்பு)

சாய்ந்தமருது தொகுதியைப் பிரதேச சபையாக அறிவித்து உத்தரவு பிறப்பிக்குமாறு 2017 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை நேற்றுடன் நிறைவடைந்தது.

குறித்த பிரதேசம் நகர சபையாக தரம் உயர்த்தப்பட்ட காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த மனு நேற்று மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

சாய்ந்த மருது பகுதியைச் சேர்ந்த மொஹமட் அலியார் மற்றும் மொஹமட் நௌபர் ஆகியோரால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### காயும் கனியாகும்

❖ மனித மனம் காயாக இருக்கக் கூடாது. அன்பு, அருளால் கனிய வேண்டும். பழனி என்னும் திருநாமத்தைச் சொல்லிப் பழகினால், மனம் கனிந்து விடும்.

❖ பழநி முருகன் ஞானபண்டிதனாக வீற்றிருந்து, தன்னை நாடி வருபவர்களின் உள்ளங்களை பழுக்க வைக்கிறான்.

❖ "அதிசயம் அநேகமுற்ற பழநிமலை" என அருணகிரிநாதர் பழநிமலையின் சிறப்பைப் போற்றியுள்ளார்.

❖ **பழநி மலையைத் தரிசித்து வந்த முருகன் அடியவரை கண்டாலும், செய்த பாவம் தீர்ந்து விடும்.**





முல்லைத்தீவு தேவிபுரம் இனிய வாழ்வு இல்லத்தின் 2020ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

(படங்கள்-கிளி.குமார்)

# வெற்றிவாகை சூடியது மடு அணி



மடு உதைபந்தாட்ட கழகம்



மன்னார் பீனிக்ஸ்

(மன்னார்)

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிரிமீயர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 2 ஆம் நாள் போட்டிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7.45 மணியளவில் மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

"மன்னார் பிரிமீயர் லீக்" தலைவரும், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவரும், மன்னார் நகர முதல்வருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த உதைபந்தாட்ட போட்டியானது மடு உதைபந்தாட்ட கழகத்திற்கும், மன்னார் பீனிக்ஸ் உதைபந்தாட்ட கழகத்திற்கும் இடையில் இடம் பெற்றது.

முதலில் போட்டி ஆரம்பமாகி 33 ஆவது நிமிடத்தில் மடு உதைபந்தாட்ட கழக வீரரான ரி.கிளின்ரன் முதலாவது கோலையும், அதனைத் தொடர்ந்து 86 ஆவது நிமிடத்தில் 2 ஆவது கோலையும் அடித்தார்.

இதனால் மடு உதைபந்தாட்ட கழகம் 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2-285)

# விளையாட்டு உலகின் உயரிய அங்கீகாரம் லாரியஸ் விருதை வென்றார் சச்சின்




(பெர்லின்)

விளையாட்டு உலகின் மிக உயரிய அங்கீகாரங்களில் ஒன்றாக கருதப்படும் லாரியஸ் விருது சச்சின் டெண்டுல்கருக்கு வழங்கப்பட்டது.

விள்ளயாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு ஆண்டுதோறும் லாரியஸ் விருதுகள் வழங்கப்படுகின்றன.

விளையாட்டு உலகின் மிக உயரிய விருதுகளில் ஒன்றாக இந்த விருது கருதப்படுகிறது. அவ்வகையில் 2019 ஆம் ஆண்டுக்கான லாரியஸ் விருதுகள் வழங்கும் விழா ஜேர்மனி தலைநகர் பெர்லினில் நடைபெற்றது.

இதில் 2019 ஆம் ஆண்டின் சிறந்த வீரருக்கான லாரியஸ் விருது நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ்சி மற்றும் பார்முலா முன் கார் பந்தயத்தில் 6 முறை சம்பியன் பட்டம் வென்ற ஹமில்டன் ஆகியோருக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது. இதேபோல் சிறந்த விளை யாட்டு வீராங்கனைக்கான விருதை அமெரிக்க ஜிம்னாஸ்டிக்ஸ் ஜாம்பவான் சிமோன் பைல்ஸ் தட்டிச் சென்றார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஆடவருக்கான ரக்பி உலகக் கிண்ணத்தை வென்ற தென்னாபிரிக்க அணிக்கு சிறந்த அணிக்கான விருது வழங்கப்பட் டது.

ஜேர்மனியின் கூடைப்பந்து ஜாம்பவான் டிர்க் நோவிட்ஸ்கி, லாரியஸ் வாழ்நாள் சாதனையாளர் விருதை பெற்றார்.

கடந்த 20 ஆண்டுகளில் விளையாட்டு உலகின் சிறந்த தருணமாக, இந்திய கிரிக்கெட் அணியின் சச்சின் டெண்டுல்கரை, 2011 உலகக்கிண்ணம் இறுதி ஆட்டத்தில் வென்ற பின், வீரர்கள் தோளில் சுமந்து சென்ற நிகழ்வு அதிக வாக்குகள் பெற்று தேர்வானது.

அந்த விருதை சச்சின் பெற்றுக் கொண்டார். அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்டீவ் வோக் இந்த விருதை வழங்கினார்.

விருது பெற்ற பின் பேசிய சச்சின் டெண்டுல்கர்,

"இது மிகவும் சிறப்பு மிக்கது. உலகக் கிண்ணத்தை வென்ற போது இருந்த உணர்வுகளை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. ஒட்டுமொத்த நாடும் அந்த தருணத்தை கொண்டாடியது" என அவர் தெரிவித்தார்.(ஜ-2)

# கராத்தே விருது வழங்கும் நிகழ்வு



ஜப்பான் கராத்தே மருயோ சிக்காய் அமைப்பின் (JKMO) அமைப்பின் விருது வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு பாடும் மீன் ஓய்வு விடுதியில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா, மட்டக்க ளப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவ ணபவன், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் முதல்வர் எம். புண்ணியமூர்த்தி, மட்ட க்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஏ. ஈஸ்பரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஷிப்லி பாறூக், மட்டக்களப்பு கல்வி வலயத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. லவக்குமார் உட்பட இன்னும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு கராத்தே வீரர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். (ஜ-2)



## விக்கிரகங்களை உடைத்த...

இராமநாதபுரம் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி கோவில் ஒன்றில் ஒரு இளைஞர் துக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த இளைஞரின் நண்பர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு குறித்த கோவிலுக்குள் சென்று நண்பனை கடவுள் காப்பாற்ற வில்லை என தெரிவித்து கோவில் விக்கிரகங்கள் மற்றும் சிலைகளை அடித்து நொருக்கியுள்ளார்.

இதனால் கோவில் நிர்வாகத்தி னரின் முறைப்பாட்டுக்கமைய நேற்று குறித்த இளைஞரை பொலி ஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது இளைஞரின் உருக்க மான பதிலை கேட்டு கோவில் நிர் வாகத்தினர் அவரை விடுதலை செய் யும்படி தெரிவித்ததை அடுத்து இளை ஞர் விடுவிக்கப்பட்டார். (ம-3,9,316)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

## முதலீட்டுக்கு ஏற்ற நாடாக ..

அதிகாரிகளுடன் நேற்று பிற் பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரி வித்தார்.

சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், ஒழுங்குவிதிகளில் நடைமுறைக் கேற்றவாறு திருத்தங்களை மேற் கொள்வதற்கு அனைத்து நிறு வனங்களும் ஒன்றிணைந்து செயற் பட வேண்டுமென ஜனாதிபதி அவர்கள் ஆலோசனை வழங் கினார்.

சுற்றாடலை பாதுகாப்ப தோடு மக்களுக்கு பயனளிக்கக்கூடிய முறைமைகளை அறிமுகப்படுத்து வது அதிகாரிகளின் பொறுப்பாகு மெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனுமதிப் பத்திரங்கள் வழங் கும் போது ஏற்படும் காலதாமங் களை இயன்றளவு குறைத்துக் கொள்வதோடு, வெளிநாட்டு மற் றும் உள்நாட்டு முதலீட்டாளர் களை ஊக்குவிப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-3)

## தமிழர்களின் கோரிக்கை நியாயமானவையே...

இலங்கை வந்துள்ள பிரித் தானிய பாராளுமன்ற உறுப்பினர் மல்க்கம் ப்ருஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தனை நேற்று பாராளுமன்றத் தில் சந்தித்து கலந்துரையாடினார்.

பாராளுமன்ற உறுப்பினரின் வருகை குறித்து மகிழ்ச்சி தெரிவித்த இரா.சம்பந்தன் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். தமிழ் மக்களின் பூர்விக நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அரச அனு சரணையுடன் சட்டவிரோத குடியேற் றங்கள் தமிழ் மக்களின் பிரதே சங்களில் இடம்பெறும் வரையில் தமிழ் மக்கள் தனி நாடு கோரிக் கையை முன்வைக்கவில்லை என தெரிவித்த இரா.சம்பந்தன், எவ்வாறெனினும் அரசியலமைப் பின் 13ஆவது திருத்தசட்டம் கொண்டு வரப்பட்டதன் பின்னர் தனி நாட்டு கொள்கையை தமிழ் மக்கள் கை விட்டனர் எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

13வது திருத்தச்சட்டம் ஒரு முன்னேற்றகரமான ஒரு படியாக இருந்தாலும் ஆக்கபூர்வமான அதிகாரபரவலாக்கத்திற்கு அது போதுமானதாக இருக்கவில்லை. இதனை தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் 13 ஐ வைத்து திருத்த சட்டத்தையும் தாண்டிய ஒரு அதிகாரபரவலாக்கத்திற்கு அடிகோலும் வகையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந் தன. பல வரைபுகள் முன்வைக்கப் பட்டாலும் இன்று வரை ஒரு தீர் வினை நாம் கண்டுகொள்ளவில்லை எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கருத்து தெரி வித்த யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பேரினவாத ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமேயானால் அதி கார பரவலாக்கம் மாத்திரமே ஒரே வழி என தெரிவித்தார். அதிகார பரவலாக்கமானது தமிழ் மக்களின் பிரச்சினைகளை மாத்திரமன்றி ஏனைய பிரச்சினைகளிற்கும் தீர்வுகளை காண வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.

இந்த நாட்டில் வாழும் பெரும் பான்மை மக்களாலும் ஏற்றுக்கொள் ளப்படக்கூடிய ஒரு தீர்வையே நாம் எதிர்பார்க்கிறோம் ஆனால் பெரும் பான்மை மக்கள் சரியான திசையிலே வழிநடத்தப்பட்ட வேண்டும் என தெரிவித்த சுமந்திரன், அதிகாரபர வலாக்கத்திற்கான கோரிக்கைகை கள் தொடர்ச்சியாக நிராகரிக்கப் பட்டதன் விளைவாகவே பிரிவினை வாதம் உருவானது என்றும் சுட்டிக் காட்டினார். எனவே நிரந்தரமான தீர்வொன்றினை கண்டுகொள் ளும் வகையிலும் கடந்தகால சம்ப வங்கள் மீள் நிகழாத முறையிலும் முன்னேறி செல்வதற்கு புத்தியோடு செயற்படவேண்டியதன் அவசி யத்தினையும் வலியுறுத்தினார்

இதன்போது கருத்து தெரிவித்த பரித்தானிய பாராளுமன்ற உறுப் பினர் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இரா.சம்பந்த னின் பங்களிப்பினை பாராட்டிய அதேவேளை நீங்கள் எடுத்துள்ள நிலைப்பாடு மிகவும் ஆக்கபூர்வ மானது எனவும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் நியாயமானது எனவும் தெரிவித்தார். மேலும் இந்த விடயம் தொடர்பில் உங்களது தெளிவான நியாயமான அமைதி யான நடைமுறைகள் மெச்சத்தக் கது எனவும் தொடர்ந்தும் ஒரு நியாயமான தீர்வினை அடையும் நோக்கில் இலங்கை அரசாங்கத் துடன் இணைந்து செயற்பட பிரித் தானியா தயாராக உள்ளது என வும் தெரிவித்தார். (ம-3)

## தொழில் நுட்...

யில் வசித்து வந்தவர் என்பதுடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப அலுவல ராக கடமையாற்றியவர் என்றும் தெரிய வருகிறது.

கடந்த மூன்று நாட்களாக தேடப்பட்டு வந்த நிலையில் குறித்த நபர் புங்குடுதீவில் உள்ள கிண றொன்றிலிருந்து சடலமாக மீட்கப் பட்டுள்ளார். (ம-3)

## கிளிநொச்சி...

கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தில், தொலைபேசி இலக்க மொன்றை கொடுத்து முறைப்பாடு செய்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற பகிடிவதைச் சம்பவங்கள் தொடர் பில்.

விசாரணைகளை மேற்கொள் வதற்காக தொலைபேசி இலக் கத்தை ஆராய கிளிநொச்சி நீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில், மற்றுமொரு முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழகத் தக்வல்கள் தெரி விக்கின்றன. (ம-3)

## முன்னாள் இரா...

சேர்ந்த ஒருவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தமை தொடர் பில் குறித்த முன்னாள் இராணுவ உறுப்பினர் மீது குற்றம் சுமத்தப் பட்டிருந்தது.

வழக்கு விசாரணையில் அவ ருக்கு எதிராக குற்றம் நிரூபிக்கப் பட்டதால் 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட துடன் 10 ஆயிரம் ரூபாய் அபராத மும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொலை செய்யப் பட்ட நபரின் உறவினர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நட்டஈடு செலுத்து மாறும் அதனை செலுத்த தவறினால் மேலும் ஒருவருடம் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் திருகோண மலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ம-3)

## வடக்கு, கிழ...

அந்த கூட்டணியில் அங்கம் வகிக்கும் வேட்பாளர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வடக்கு, கிழக்கில் களமிறக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சுதந்திரக்கட்சியின் பொதுச் செய லாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித் தார்.

தற்போதைய ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ மற்றும் முன் னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகிய மூவரின் வழிகாட்டலில் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று வெற்றி பெறுவோம்.

நாட்டின் முன்னேற்றத்துக்கான தமது இந்த பயணத்தில் சந்திரிகா குமாரதுங்கவும் இணைந்து கொள் வார் ள்ன்று எதிர்பார்ப்பதாகவும் தயாசிறி ஜயசேகர மேலும் தெரி வித்தார். (ம-3)

## ஐ.தே.க தலைமை...

கடந்த மாதம், இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரு மான சஜித் பிரேமதாசவை பிரதமர் வேட்பாளராகவும், புதிய கூட்டணி யின் தலைவராகவும் நியமிக்க முடிவு எட்டப்பட்டது.

எவ்வாறாயினும், நடைபெற வுள்ள பொதுத் தேர்தலில் போட்டி யிட புதிய கூட்டணி மற்றும் சின் னம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களிடையே மோதல்கள் ஏற்பட்டிருந்தன.

இதனை அடுத்து இடம்பெற்ற பல கூட்டத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி எதிர்வரும் பாராளுமன் றத் தேர்தலில் அன்னம் சின்னத்தில் போட்டியிடுவதற்கான இறுதி முடிவு நேற்று எட்டப்பட்டுள்ளது. (ம-3)

## பருத்தித்துறை...

கரை வீதியிலுள்ள கைவிடப்பட்ட காணி ஒன்றினை உரிமையாளர் சுத்தம் செய்த போது அப்பகுதியில் இரண்டு கைக்குண்டுகள் காணப் பட்டதை அடுத்து பருத்தித்துறை பொலிஸாருக்கு இது சம்பந்தமாக அறிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்தின் உத்தரவை பெற்று கைக்குண்டை பொலிஸார் அகற்றினர். (ம-3,60)

## கோட்டா அரசுக்கு சார்பாக...

இது தொடர்பில், தனது சமூக வலைத்தள பக்கத்தில் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். அவரது சமூக வலைத்தள பதிவில்,

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எம்.சி.சியை கேட்டு, ஆளை பிடித்து, எமது அமைச்சரவைக்குள் கொண்டு வர செய்தார்கள். இன்று சவேந்திர சில்வா விவ காரத்தை, பாராளு மன்ற தேர்தலுக்கு முன் தூக்கி பிடிக்கிறார்கள்.

இரண்டும் அன்றைய எதிர்க்கட் சிக்கும், அவர் இன்றைய அரசுக் கும் ஆதரவு அலையை ஏற்படுத் தும் நடவடிக்கைகளாகும்.

அமெரிக்கா தனது பிரஜை களால் நடத்தப்படும் இந்த அரசாங் கத்துக்கு மறைமுகமாக ஆதர வளிக்கின்றதா என கேட்க விரும்பு கிறேன்.

ஜெனிவா பேரவையில் இருந்து வெளியேறும் அமெரிக்கா, இன்று சவேந்திர சில்வா பற்றி பேசி தமிழ் மக் களை பந்தாக்கி பந்து விளையாடு கிறதா? என கேட்க விரும்புகிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 887
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,915,585/-
வெற்றி இலக்கங்கள் 25 47 56 59 O

R 10 31 46 55
சீட்டிழுப்பு இல: 561
18/02 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,416,280
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1648 சீட்டிழுப்பு திகதி 18/02/2020
வெற்றி இலக்கங்கள் 46 50 53 66 F
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 46,819,076

ராசி அதிர்ஷ்டம்
திகதி 18.02.2020 வெற்றி வாரம் 2773 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் மேடம் 17 25 31 33
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,754,064
டபுள் சான்ஸ்
ரூ.500 பரிசுக்குரிய 8826
ரூ.100 பரிசுக்குரிய 849
விசேட இல.
19.02.2020 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

மஹஜன சம்பத
திகதி 2020/02/18
சீட்டிழுப்பு இலக்கம் 4117
F 8 3 5 6 1 9

செவன
திகதி 18/02/2020
சீட்டிழுப்பு இலக்கம் 263
U 22 36 38 52

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 18.02.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2396
C 01 43 51 62

நீரோகா
திகதி 2020/02/18
சீட்டிழுப்பு இலக்கம் 664
துலாம் 19 36 41 49

# அரசியல் தீர்வு குறித்து கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்க முடியாது

## இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன



***(கொழும்பு)* அரசியல் தீர்வு குறித்து கூட்டமைப்பினர் அரசாங்கத்துக்கு ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர்,

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா விவகாரத்தில் இவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியல் தீர்வு குறித்து கூட்டமைப்பினர் அரசாங்கத்திற்கு ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது. அரசியல் தீர்வை வழங்குவதாக குறிப்பிட்டு ஜனாதிபதி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இனங்களுக்கிடையில் முரண்பாடற்ற தீர்மானங்களை மாத்திரமே முன்னெடுப்போம்

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் அக்கட்சியின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிடும் கருத்துக்கள் முற்றிலும் வெறுக்கத்தக்கவை.

உலகில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பினை இல்லாதொழிக்க அரசாங்கம் முன்னெடுத்த செயற்பாடுகளுக்கு இராணுவத் தளபதி பாரிய பங்களிப்பு வழங்கினார்.

அடுத்த மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள இலங்கை தொடர்பான கூட்டத் தொடரினை இலக்காகக் கொண்டே இந்த பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஒருதலைப்பட்சமானது என்பதை வெளிவிவகார அமைச்சு கடுமையாக எதிர்த்துள்ளது.

அத்தோடு இந்த விடயம் தொடர்பாக மேல் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அரசாங்கத் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலைமையினை அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் வெற்றி கொள்ளும்" என அவர் தெரிவித்தார். (ம-3)

# சவேந்திர சில்வாவுக்கான தடையை வரவேற்றமை தேசத்துரோகச் செயலாகும்

## சு.க பொதுச் செயலாளர் தயாசிறி

(கொழும்பு)

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடையை, வட.மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வரவேற்றுள்ளமை தேசத்துரோக செயற்பாடென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் தயாசிறி ஜயசேகர மேலும் கூறியுள்ளதாவது,

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர 2015 ஆம் ஆண்டு 31/1 பிரேரணயில் கையெழுத்திட்டு நாட்டைக் காட்டிக் கொடுத்தமையே தற்போது ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளுக்கும் பிரதான காரணமாகும்.

ஜஸ்மின் சூக்காவின் ஏற்றுக் கொள்ளப்படாத அறிக்கையைக் கொண்டே இராணுவத் தளபதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்படாத குற்றங்களை காரணம் காட்டி இவ்வாறான நடவடிக்கைகளை முனனெடுப்பதன் மூலம் அமெரிக்கா மனித உரிமை மீறலில் ஈடுபடுகின்றது.

அத்தோடு தனிநபர் ஒருவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்காக அவரது குடும்பத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதேவேளை புலம்பெயர் தமிழர்களைப் போன்று விக்னேஸ்வரன் போன்றோர் உள்நாட்டிலிருந்து கொண்டே இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றனர். இது தேசத் துரோக செயற்பாடாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்) (C-2050)

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

UK - 550*/= Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240 V2 TRAVELS (C-8785)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

**மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை**

5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது

5kg க்கு மேல் 1கிலோவுக்கான கட்டணம்

பிரான்ஸ்- ஜேர்மனி- டென்மார்க்- கொலன்ட்- பெல்ஜியம்- ரூ.750

இத்தாலி- சுவீடன்- ரூ.850 லண்டன் -ரூ.650 சுவிஸ்- ரூ.1000

கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்

டிஸ்ரிவி(DishTv), மின்சாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும்

யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும், பொதிகளை அனுப்பிடவும்

வெளிநாடு, உள்நாடுகளுக்கான பொதிகளை விரைவாகவும் குறைந்த செலவிலும் அனுப்பிட பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500 | 72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500 |



**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/= ஜேர்மனி - 640/= இத்தாலி - 690/=

கனடா - 950/= நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

**அருள்**

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9193)

**றொமானியா வேலைவாய்ப்பு**

கனரக வாகன சாரதிகள் - மேசன் சீற், மெத்தை வேலையாட்கள் இறைச்சி தொழிற்சாலை வேலையாட்கள்

உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்! சம்பளம் 450-700 US$ Rs. 81,700 தொடக்கம் Rs. 126,700

விசா – டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!

3 அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய...

**எமரல்ட் ஐல்** License No. 2268 077 00 38 215 077 55 46 956 021 2219 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம் இஷாரா புடவையகம், The Lovers/Teen Girlsக்கு அருகே www.emeraldisle.lk email jaffna@emeraldisle.lk (C-9282)

ஒரு இலட்சம் ரூபா வரையான சம்பளத்துடன் **றொமேனியா மற்றும் டுபாய்** வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்

**துரித ஹொட்டேல் கற்கைநெறி**



பயிற்சி முன்னனுபவம் உள்ளவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு & விசா

கற்கைநெறி & வேலைவாய்ப்பு பதிவுகள் ஆரம்பம்

விபரங்களுக்கு 077 36 16 798

No.1 Award Winning Institute of the North SIKARAM ACADEMY Business - Hospitality - English FAST TRACK to CAREERS Sri Lankan Entrepreneur of the Year 2017

021 2219 221 SIKARAM ACADEMY

221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். இஷாரா றெக்ஸ் - றீன் கேர்ள் அருகே (C-9281)

**பராமரிப்பாளர் தேவை**

யாழ் நகரில் புதிதாக தொடங்கவிருக்கும் கல்லூரியில் துப்பரவாக்கல், பூந்தோட்ட பராமரிப்பு, அலுவலக பராமரிப்பு போன்ற வேலைகளை முழுநேரமாக செய்யக்கூடிய அனுபவமுள்ளவர் தேவை.

சம்பளம் - 25'000/= (C-9283)

தொடர்புகளுக்கு - 0768226243

**Study in LATVIA**

MBBS | Engineering | IT | Management

ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

Admission open for 2020 Intake



★ நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
★ IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
★ 100% விசா உத்தரவாதம்.
★ குறைந்த பாட நெறி கட்டணம்
★ Schengen visa (C-9270)

Admissions : 0776656778 / 0773013060

iCS A Complete Visa Solutions Study Abroad

77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் 021 492 6222

107 B 1/1 , Galle Road , Colombo 6. 011 434 3322


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.